




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் **பேப்பர்பாய்**

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY









சென்னை மலர்: 01 இதழ்: 202 05.03.2026 வியாழக்கிழமை

Chennai Volume: 01 Issue: 202 Thursday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


# அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல்: ஈரான் தலைமை ராணுவ தளபதி எச்சரிக்கை





**டெஹ்ரான், மார்ச்.5:**

ஈரான் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட்டு இருப்பதாக கூறி, கடந்த 28-ந் தேதி ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக தாக்குதலை தொடங்கின. ஈரான் தலைநகர் டெஹ்ரானில் இரு நாட்டு படைகளும் நடத்திய சரமாரி தாக்குதலில் ஈரான் உச்சபட்ச தலைவர் அயதுல்லா அலி காமேனியும், அவருடைய குடும்பத்தினரும் பலியானார்கள். காமேனியின் மனைவி மன்சரே கொஜஸ்தே தாக்குதலில் காயமடைந்து கோமா நிலையில் இருந்தார். அவரும் சிகிச்சை பலனின்றி இறந்தார்.

அதற்கு பதிலடியாக, இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணைகளை அலை, அலையாக வீசி தாக்குதலில் ஈடுபட்டது. மேலும், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைத்தளங்களை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. ஓமன் நாட்டில் எண்ணெய் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. குவைத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 3 அமெரிக்க வீரர்கள் பலியானார்கள்.

இந்நிலையில், போரின் 4-வது நாளான நேற்று அதிகாலையில், சவுதி அரேபியா தலைநகர் ரியாத் நகரில் உள்ள அமெரிக்க தூதரகம் மீது 2 டிரோன்கள் மூலம் ஈரான் தாக்குதல் நடத்தியது. அதில், தூதரகத்தில் சிறிய அளவிலான தீவிபத்து ஏற்பட்டது. லேசான சேதம் ஏற்பட்டதாக சவுதி அரேபிய ராணுவ அமைச்சகம் தெரிவித்தது.

தூதரக சுற்றுச்சுவர் அருகே அமெரிக்கர்கள் யாரும் நடமாட வேண்டாம் என்று அமெரிக்க தூதரகம் கேட்டுக்கொண்டது.

அமீரகத்தில் 2 அமேசான் தரவு மையங்கள் உள்ளிட்ட இலக்குகள் மீது ஈரான் நேற்று தாக்குதல் நடத்தியது. பஹ்ரைனிலும் ஒரு அமேசான் தரவு மையம் தாக்கப்பட்டது.

அதே சமயத்தில், நேற்றும் ஈரானை அமெரிக்க, இஸ்ரேல் படைகள் கலங்கடித்தன. இடைவிடாத தாக்குதல் இப்போதுதான் தொடங்கி இருப்ப தாகவும், இந்த போர் நீண்ட காலம் நீடிக்கும் என்றும் அமெரிக்க ஜனாதி பதி டிரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார். அதற்கேற்ப ஆயுதங்கள் குவித்து வைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஈரான் தலைநகர் டெஹ்ரான் முழுவதும் நேற்று முன்தினம் இரவில் இருந்து நேற்று அதிகாலைவரை குண்டுவெடிப்பு நடந்தவண்ணம் இருந்தது. தலைக்கு மேல்விமானம் பறப்பது போன்ற சத்தம் கேட்டதாக அங்கு வசிப்பவர்கள் தெரிவித்தனர்.

டெஹ்ரானுக்கு 800 கி.மீ. தொலைவில் உள்ள கெர்மானில் ஈரான் விமான தளம் உள்ளது. அங்கு ராணுவ ஹெலிகாப்டர்களை நிறுத்தி வைப்பது வழக்கம். அந்த தளம் மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சில் 13 ஈரான் ராணுவ வீரர்கள் பலியானதாக ஒரு செய்தி நிறுவனம் தெரிவித்தது. டெஹ்ரானில் ஒரு ஒளிபரப்பு நிலையம் மீது 2 குண்டுகள் வீசப்பட்டதாக ஈரான் அரசு டி.வி. தெரிவித்தது. ஆனால் நல்லவேளையாக யாரும் காயம் அடையவில்லை.

இதற்கிடையே, ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா இயக்கத்தினர் இயங்கி வரும் லெபனான் மீது இஸ்ரேல் படைகள் நேற்று தாக்குதலை தீவிரப்படுத்தின. ஹிஸ்புல்லா இயக்கத்தினர் ஏவுகணை வீசியதற்கு பதிலடியாக இத்தாக்குதல் நடத்தப்பட்டது. தலைநகர் பெய்ரூட்டின் தென்பகுதியில் குண்டுவெடிப்பு சத்தங்கள் கேட்டன. கட்டிடங்களில் புகை வெளிவந்து கொண்டிருந்தது. இதில் 52 பேர் பலியானதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அமெரிக்காவும், இஸ்ரேலும் நடத்தி வரும் தாக்குதல்களில் ஈரானில் இதுவரை 787 பேர் பலியானதாக ஈரான் செம்பிறை அமைப்பு தெரிவித்துள்ளது. அதுபோல். இஸ்ரேலில் ஈரான் நடத்திய தாக்குதல்களில் 11 பேர் இறந்துள்ளனர். அமெரிக்க தரப்பில் 6 பேர் பலியாகி இருப்பதை அமெரிக்க ராணுவம் உறுதி செய்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்கா, இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்தால், மத்திய கிழக்கில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து இடங்கள் மீதும் பதில் தாக்குதல் நடத்தப்படும் ஈரான் ஆயுதப் படைகள் (IRGC) அமைப்பின் தலைமை தளபதி இப்ராஹிம் ஜபாரி எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும் அமெரிக்கர்கள் தங்கள் பெரும்பாலான விமானங்களை சைப்ரஸில் நிறுத்தியுள்ளனர். அவர்களை வெளியேற கட்டாயப்படுத்த நாங்கள் அங்கு பல ஏவுகணைகளை ஏவுவோம்" என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் அவர்களின் நட்பு நாடுகளுக்கு எதிராக ஈரானின் விரோதப் போக்கு அதிகரித்து வரும் நிலையில், பிராந்தியத்தில் அதிகரித்த பதட்டங்களுக்கு மத்தியில் ஈரானின் இந்த கருத்துக்கள் வந்துள்ளன. அறிவிக்கப்பட்ட இந்த அச்சுறுத்தலுக்கு இஸ்ரேல் மற்றும் அமெரிக்க அதிகாரிகளிடமிருந்து உடனடி பதில் எதுவும் இல்லை.

## ஓமன், குவைத் தலைவர்களுடன் பிரதமர் ஆலோசனை: இந்திய குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வலியுறுத்தல்



**புதுடெல்லி, மார்ச்.5:**

அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் இடையிலான போர் மத்திய கிழக்கு வளைகுடா நாடுகளில் தீவிரமடைந்து வரும் நிலையில், ஓமன் சுல்தான் மற்றும் குவைத் இளவரசருடன் பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொலைபேசி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

அப்போது, அங்கு வசிக்கும் இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து அவர் தனது கவலையைத் தெரிவித்து அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அவர் கேட்டுக் கொண்டார். முன்னதாக, திங்கள்கிழமை அன்று சவூதி அரேபியா, பஹ்ரைன் மற்றும் ஜோர்டான் நாட்டுத் தலைவர்களுடன் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தியிருந்த நிலையில், நேற்று ஓமன் சுல்தான் ஹைதம் பின் தாரிக் மற்றும் குவைத் இளவரசர் ஷேக் சபா அல்-காலேத் அல் -ஹமத் அல் -முபாரக் அல் -சபா ஆகியோருடன் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

வளைகுடா பிராந்தியத்தில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ளதால் வான் வழிப் போக்குவரத்து முடக்கம், கச்சா எண்ணெய் விநியோகத் தடை மற்றும் எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீதான அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. இதன் பின்னணியில் நடைபெற்ற ஆலோசனையின் போது, வளைகுடா நாடுகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு பிரதமர் மோடி கண்டனம் தெரிவித்தார். மேலும், அங்கு வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான இந்தியர்களின் பாதுகாப்பு மற்றும் நலன் குறித்து அவர் விரிவாக கேட்டறிந்தார்.

முன்னதாக, ஈரான் மற்றும் வளைகுடா பிராந்தியத்தில் நிலவும் மிக மோசமான சூழல் குறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியது. அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்பு தான் தற்போதைய முக்கிய முன்னுரிமை என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபிய இளவரசர் முகமது பின் சல்மான் மற்றும் பஹ்ரைன் மன்னர் ஹமத் பின் ஈசா அல் கலீஃபா ஆகியோருடன் பிரதமர் மோடி பேசுகையில், பிராந்தியத்தில் அமைதி திரும்புவதே இப்போதைய மிக முக்கியமான தேவை என்பதை வலியுறுத்தினார்.

மேலும், இந்த இக்கட்டான காலக் கட்டத்தில் அங்குள்ள இந்தியர்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்காக சவுதி இளவரசருக்கு பிரதமர் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் 11-ந் தேதி தமிழகம் வருகிறார் பிரதமர் மோடி



**திருச்சி, மார்ச்.5:**

தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியான அதிமுக தலைமையிலான கூட்டணியில் பாஜக, பாமக (அன்புமணி அணி), அமமுக, தமாகா, இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதிக்கட்சி, பெருந்தலைவர் மக்கள் கட்சி உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன.

இந்தக் கூட்டணியில், இன்னும் தொகுதி பங்கீடு குறித்த பேச்சு வார்த்தை தொடங்கப்படவில்லை என்றாலும், பாஜகவுக்கான தொகுதிகள் குறித்து தலைவர்கள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகின்றன. நேற்று முன்தினம் டெல்லி சென்ற அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, இதுகுறித்து மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவை சந்தித்து பேசினார்.

பிரதமர் மோடி வருகை

தமிழக சட்டசபை தேர்தல் தேதி அடுத்த வாரம் அறிவிக்கப்பட உள்ள நிலையில், தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட உடன் அதிமுகவில் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, தேசிய ஜனநாயக கூட்டணியின் முதல் பொதுக்கூட்டம் கடந்த ஜனவரி மாதம் 23-ந் தேதி சென்னையை அடுத்த மதுராந்தகத்தில் நடைபெற்றது. இதில், பிரதமர் நரேந்திரமோடி பங்கேற்று பேசினார்.

திருச்சியில் 11-ந் தேதி பொதுக்கூட்டம்

இந்த நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணியின் 2-வது பொதுக்கூட்டம் இம்மாதம் (மார்ச்) 1-ந் தேதி புதுச்சேரி மற்றும் மதுரையில் நடைபெற்றது. இதில், பிரதமர் நரேந்திரமோடி பங்கேற்றதுடன், மத்திய அரசின் முடிவுற்ற பணிகளை தொடங்கிவைத்து, புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிலையில், வரும் 11-ந் தேதி (புதன்கிழமை) பிரதமர் நரேந்திரமோடி மீண்டும் தமிழகம் வர இருக்கிறார். திருச்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நடைபெறும் பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் அவர் பங்கேற்று பேசுகிறார். இந்த கூட்டத்தில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்பட கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்று பேச இருக்கின்றனர். அதற்கான ஏற்பாடுகளில் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் ஈடுபட்டுள்ளார்.

அடுத்ததாக, கன்னியாகுமரி மற்றும் கோவையில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் பங்கேற்க பிரதமர் மோடி தமிழகம் வருவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ‘அய்யா வைகுண்டர் வழியில் சமத்துவம் பேணுவோம்!’ - முதல்வர் ஸ்டாலின்



**சென்னை, மார்ச்.5:**

அய்யா வைகுண்டரின் பொன்மொழிகளைப் பின்பற்றி நடப்போம்! சமத்துவம் பேணுவோம்!' என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

அய்யா வைகுண்டரின் 194 வது பிறந்தநாளையொட்டி தமிழக முதல்வர் ஸ்டாலின் தனது சமூக வலைதளத்தில் பதிவு வெளியிட்டுள்ளார்.

"இடுப்பில் இருந்த துண்டைத் தலைக்குக் கிரீடமாக மாற்றிய அய்யா வைகுண்டரை நாம் பெற்ற நாள்!

"கீழ் நோக்கிப் பிடித்தாலும், மேல் நோக்கியே எரியும் தீபத்தைப் போல, விளக்கின் ஒளியாய், வீரத் தனமாக இருங்கள்" எனச் சமத்துவக் கனலைச் சமூகத்தில் விதைத்து நிறைந்தவர் அய்யா வைகுண்டர்.

'தாழக் கிடப்பாரைத் தற்காப்பதே தர்மம்' எனும் அவரது கூற்றையே ஆட்சிக்கான அடிப்படையாய்க் கொண்டு நலிந்தோரின் நலம் நாடும் அரசாக நமது திராவிட மாடல் அரசும் செயல்படுகிறது.

அய்யா வைகுண்டரின் பொன்மொழிகளைப் பின்பற்றி நடப்போம்! சமத்துவம் பேணுவோம்!" என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

### இன்றைய நாள்

வியாழக்கிழமை
(5–03–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–21
பிறை: தேய்பிறை
திதி
துவிதியை இரவு 604 வரை
பிறகு திருதியை
நட்சத்திரம்:
உத்திரம் காலை 9.09 வரை
பிறகு அஸ்தம்.
யோகம்
மரண/சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 1.30–3.00 மணி
எமகண்டம்
காலை 6,007,30 மணி
சூலம் – தெற்கு
நல்ல நேரம் :
காலை 9–10 மணி
மாலை4–5 மணி

| | |
|---|---|
| மேஷம் | உயர்வு |
| ரிஷபம் | நட்பு |
| மிதுனம் | ஜெயம் |
| கடகம் | பண்பு |
| சிம்மம் | இயல்பு |
| கன்னி | இன்பம் |
| துலாம் | தெளிவு |
| விருச்சிகம் | ஆதரவு |
| தனுசு | உதவி |
| மகரம் | உறுதி |
| கும்பம் | பெருமை |
| மீனம் | சாந்தம் |

## தமிழகத்தில் 29 சதவீதம் மருந்துகளில் தரம் குறைவு



**சென்னை, மார்ச்.5:**

மத்திய, மாநில அரசுகள் சந்தைகளில் விற்பனை செய்யப்படும் மருந்துகளின் தரம் குறித்து ஒவ்வொரு மாதமும் ஆய்வுகளை நடத்துகிறது. மருந்தகங்கள், சில்லறை விற்பனையகங்கள், மொத்த விற்பனைக் கூடங்கள், கிடங்குகளில் ஏதேனும் சில மருந்துகளை எடுத்து பரிசோதிப்பது வழக்கம்.

மருந்து கட்டுப்பாட்டு வாரிய வழிமுறைகளின்படி உற்பத்தி செய்யப்படவில்லை என்றால் அவை தரமற்ற மருந்துகளாக கருதப்படும். அந்த வகையில், கடந்த ஜனவரி மாதம் நாடு முழுவதும் 215 மருந்துகள் தரமற்றவையாக கண்டறியப்பட்டது.

அதில், தமிழகத்திலிருந்து மட்டும் 43 மருந்துகள் இடம்பெற்றிருந்தன.

தமிழகத்தில் ஜனவரி மாதத்தில் 147 மருந்துகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதில், 29 சதவீத மருந்துகள் மருந்து கட்டுப்பாட்டு வாரியத்தின் விதிமுறைகளின் கீழ் உற்பத்தி செய்யப்படாதது தெரியவந்தது. இதனால், தரம் குறைவாக இருப்பதாக கணக்கில் கொள்ளப்பட்டது.

இதேபோல, கர்நாடகாவில் 21 சதவீதமும், ராஜஸ்தானில் 17 சதவீதமும் தரமற்ற மருந்துகள் இருப்பதும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.




# திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம்



**திருப்பத்தூர், மார்ச் 05:** திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் V.சியாமளா தேவி., தலைமையில் நடைபெற்றது. இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மொத்தமாக 30 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

# கரூர் ஸ்ரீஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் மகாகும்பாபிஷேக விழா




**கரூர், மார்ச் 5:** கரூர் மாவட்டம், மேலப்பாளையம் கிராமம், எஸ்ஆர்எம் திருமண மண்டபம் கிழக்கில் மாருதி நகரில் அமைந்து உள்ள ஓம் ஸ்ரீ கந்த ஆஸ்ரமம் அருள்மிகுஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேக விழா வரும் மார்ச் 6 ந்தேதி வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

எங்கும் நீக்கமர நிறைந்து அருள்பாலிக்கும் இறைவன் முருகப்பெருமானின் மூன்றாம் படையாகிய பழனி ஸ்ரீபாலதண்டாயுதபாணி சுவாமிக்கு புதிய ஆலயமாக கரூர் மாவட்டம், கரூர் வட்டம், மேலப்பாளையம் கிராமம், மாருதி நகரில் அருள்மிகு சர்வ வல்லபை கணபதி. அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி, ஸ்ரீ மத் போகர் சித்தர், அருள்மிகு இடும்பன் சுவாமி, அருள்தரும் புவனநாயகி உடனாகிய அருள்மிகு புவனநாதர், அருள்மிகு காலபைரவர். அருள்மிகு நவகிரக சுவாமிகள் அருள்மிகு நாக கன்னிகை சுவாமிகள் அமைக்கப்பட்டு ஆலய திருப்பணிகள் சிற்ப சாஸ்த்திர முறைப்படி செவ்வனே செய்து பஞ்சவர்ணங்கள் தீட்டி சிவாகம முறைப்படி மாசி மாதம் 22-ம் தேதி மார்ச் (06.03.2026) வெள்ளிக்கிழமை திரிதியை திதியும் அஸ்த நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 8.30 மணிக்கு மேல் 10.00 மணிக்குள் மீன லக்னத்தில் மஹா கும்பாபிஷேக விழா வேத சிவாகம திருமுறை முறைப்படி நடைபெற உள்ளது.

4 ந்தேதி புதன் கிழமை காலை 7.00 மணிக்கு புலியூர் ஸ்ரீ பகவதி அம்மன் கோவிலில் லிருந்துதீர்த்தம் குடம் புறப்பாடு நிகழ்ச்சி தொடங்கியது.அன்றுமாலை கணபதி ஹோமம் முதல் கால யாக பூஜைகள் தொடங்கி தொடர்ந்து வேதபாராயணங்கள், திருமுறை பாராயாணம் மஹா பூர்ணாஹுதி நடைபெறும்.

மகாகும்பாபிஷேக விழா முன்னிட்டு திருமுருகவள்ளல் வாரியர் சுவாமிகள் மாணவி கலைமாமணி தேச. மங்கையர்க்கரசி அவர்களின் ஆன்மிக சிறப்பு சொற்பொழிவு நடைபெறுகிறது.

சிறப்பு அன்னதானம் மார்ச் 04-ந்தேதி புதன்கிழமை மதியம், இரவு 5ந்தேதி வியாழக்கிழமை காலை, மதியம், இரவு 06-ந்தேதி வெள்ளிக்கிழமை காலை அன்னதானம் நடைபெறுகிறது .

ஊர் பொது மக்களும் கிராம மக்களும் ஆன்மீக அன்பர்களும் முருக பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி அருள் பெற்று பதினாறு செல்வங்களையும் பெற அஷ்ட ஐஸ்வர்யங்களுடன் பல்லாண்டு பல்லாண்டு காலம் நலமுடன் வாழ அனைவரையும் வருக வருக என அன்புடன் அழைக்கின்றோம்.

இதற்கான ஏற்பாடுகளை கரூர் ஓம் ஸ்ரீ சுந்த ஆஸ்ரமம் அருள்மிகு ஞான தண்டாயுத பாணி சுவாமி திருக்கோவில் தேவஸ்தானம் சார்பில் ஸ்தாபகர் நிறுவனத் தலைவர் மடாதிபதி தவதிரு சாந்தானந்த குமர குருபர சுவாமிகள் இளையபட்டம் பிரம்ம ஸ்ரீ தவத்திரு Dr. லோகானந்த குமர குருபர சுவாமிகள் ஓம் ஸ்ரீகந்த ஆஸ்ரமம் அருள்மிகு ஸ்ரீ ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் தேவஸ்தானம் மேலப்பாளையம் சாணம் பிரட்டி கரூர் ஆலய தொடர்புக்கு 9080410861, 9095941903

# இளையான்குடி பேரூராட்சி பகுதியில் சிறப்பு தூய்மை முகாம்







**சிவகங்கை, மார்ச் 5:** சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் மெகா தூய்மை பணி நடைபெற்றது பொது மக்களுக்கு பனை ஓலையில் உற்பத்தியாக கூடிய பொருட்கள் கண்காட்சி படுத்தி விழிப்புணர்வு விழிப்புணர்வு செய்து பொதுமக்களுக்கு இலவசமாக மஞ்சப்பை வழங்கப்பட்டு சுற்றுச்சூழல் எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தி நீர் நிலையங்கள் பொது இடங்கள் கல்வி நிலையங்கள் போன்றவற்றில் தூய்மை செய்யப்பட்டது இளையான்குடி சமூக ஆர்வலர் அப்துல் மாலிக் முன்னிலையில் பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் தங்கதுரை தலைமையில் துப்புரவு மேற்பார் அவர்கள் திராவிடன் பன்னீர் பாலச்சந்திரன் மற்றும் தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பு கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மனவளக்கலை மன்ற அறிவுத்திருக்கோவிலில் மௌன தவம் நோன்பு




**ஈரோடு, மார்ச் 05:** பௌர்ணமியை முன்னிட்டு 03.03.2026 செவ்வாய்க்கிழமை காலை 10:30 மணி முதல் பகல் 1:30 மணி வரை ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், குளூர் ஊராட்சி, செங்கரைப்பாளையம் மனவளக்கலை மன்ற அறிவுத்திருக்கோவிலில் மௌன தவம் நோன்பு அனுசரிக்கப்பட்டது.

மனவளக்கலை பேராசிரியர் திருமதி பரிபூரணம் அவர்கள் மௌன தவத்தின் போது நவகிரக தவம் மற்றும் பஞ்சபூத தவம் ஆகியன நடத்தினார்.

மௌன தவத்தில் பங்கு கொண்டோர்:- கல்பனா, ஜோதிமணி, வசந்தாமணி, பிரேமலதா, பேரா.பரிபூரணம், பூசப்பன், பொன்னுசாமி, பாலசுப்பிரமணியன், கிருஷ்ணன், பேரா.பாலமுருகன், பேரா.பூமலர் தவ முடிவில் அனைவருக்கும் அடுப்பில் வைத்து சமையல் செய்யாத இயற்கைஉணவுவழங்கப்பட்டது.

வாழ்க வளமுடன்
நன்றி! வணக்கம்!

# எல்லை மீறிச் சென்று கொண்டிருக்கிறது




**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்**

**சென்னை , மார்ச் 05:** திருச்சி ரெயில்வே நுழைவு வாயிலுக்கு இந்தி பெயர் சூட்டப்பட்டுள்ளதற்கு பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்து எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:-

பா.ஜ.க. அரசின் இந்தித் திணிப்பு:நுழைவு வாயிலிலேயே வாயில் நுழையாத பெயர்!

இந்தித் திணிப்பு வெறியில் எல்லை மீறிச் சென்று கொண்டிருக்கிறது பா.ஜ.க.!

'மொழி ஒன்று - வரிவடிவம் மூன்று' எனும் வகையில் இந்திப் பெயரையே தமிழ், ஆங்கிலத்திலும் எழுதி வைக்கும் இழிவான #HindiImposition செயலில் இறங்கியுள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

*திருச்சி மண்டல இரயில்வே அலுவலக நுழைவு வாயிலில் 'கர்தவ்ய த்வார்' என எழுதி வைத்துள்ளனர்.

* வருங்கால வைப்பு நிதி அலுவலகங்களில் (EPFO) ஏற்கெனவே 'பவிஷ்ய நிதி பவன்' என்ற பெயரைத் திணித்து விட்டனர்.

*குற்றவியல் சட்டங்களுக்கும் சமஸ்கிருதப் பெயரைத்தான் ஆங்கில வரிவடிவத்தில் எழுதுகின்றனர்.

* ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சகத்தின் பெயர் 'ஜல் சக்தி' ஆகிவிட்டது.

* மகாத்மா காந்தி நூறு நாள் வேலைத் திட்டப் பெயர் மாற்றத்திலும் இதே வேலையைத்தான் காட்டினார்கள்.

கொட்டமும், ஆணவமும் கூடிக்கொண்டே போகிறது. தமிழர்களின் சுயமரியாதையைச் சீண்டிப் பார்க்கும் இவர்களுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும்!

தமிழ், ஆங்கிலப் பெயர்களிலும் இந்தியைத் திணிக்கும் முயற்சியைக் கைவிட்டு, உடனடியாக அங்கு சரியான தமிழ்ப் பெயர்கள் இடம்பெற வேண்டும். இல்லையென்றால் தமிழர்களின் சூட்டை ஒன்றிய பா.ஜ.க. அரசு உணர வேண்டி இருக்கும் என்று எச்சரிக்கை விடுக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

# நெல்லையில் நாளை அரசு விழாவில் உதயநிதி பங்கேற்பு - 28 சார்பு அணி நிர்வாகிகளுடன் கலந்துரையாடுகிறார்



**நெல்லை, மார்ச் 05:** தி.மு.க. இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் இன்று முதல் 3 நாட்கள் தென்மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அரசு விழா, நிர்வாகிகள் சந்திப்பு உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

அதன்படி இன்று பிற்பகலில் காரில் நெல்லைக்கு வருகை தருகிறார். அவருக்கு மாவட்ட எல்லையான கங்கைகொண்டானில் நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் அப்துல் வகாப் எம்.எல்.ஏ. தலைமையில் நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர். அதனை தொடர்ந்து மாலை 5 மணிக்கு நெல்லை அரசு மருத்துவ கல்லூரி மைதானத்தில் நடைபெறும் அரசு விழாவில் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கிறார். அதில் சுமார் 15 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவதோடு, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல், முடிவுற்ற திட்டங்களை திறந்து வைத்தல் உள்ளிட்ட நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கிறார்.

பாளையங் கோட்டை கே.டி.சி.நகர் மாதா மாளிகையில் நடைபெறும் கட்சியின் 28 சார்பு அணி நிர்வாகிகளுடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துரையாடுகிறார். தொடர்ந்து இரவில் நெல்லையில் ஓய்வெடுக்கும் உதயநிதி, நாளை (6-ந்தேதி) காலை தென்காசியில் நடக்கும் அரசு விழாவில் பங்கேற்று பின்னர் சங்கரன்கோவில் செல்கிறார். அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

தொடர்ந்து அன்று மாலையில் 4 மணிக்கு வள்ளியூர் சென்று அரசு மருத்துவமனையை திறந்து வைக்கிறார்.

அதன்பின்னர் குமரி மாவட்டம் செல்கிறார். அங்கு இரவு நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் உதயநிதி நள்ளிரவில் நெல்லைக்கு வந்து ஓய்வெடுக்கிறார். தொடர்ந்து மறுநாள் (7-ந்தேதி) காலை தூத்துக்குடி தருவை மைதானத்தில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

# பாராளுமன்றத்தில் முதல்முறையாக தடம் பதிக்கும் தே.மு.தி.க.



**சென்னை, மார்ச் 05:** அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறி தி.மு.க. கூட்டணியில் சேர்ந்துள்ள தே.மு.தி.க.வுக்கு ஒரு மேல் சபை எம்.பி. பதவி அளிக்கப்பட்டுள்ளது.

அந்த கட்சியின் சார்பில் தே.மு.தி.க. பொதுச் செயலாளரான பிரேமலதாவின் தம்பியும், தே.மு.தி.க. பொருளாளருமான எல்.கே.சுதீஷ் மேல் சபை எம்.பி.யாக போகிறார்.

தே.மு.தி.க. தொடங்கப்பட்டு 20 ஆண்டுகள் ஆகும் நிலையில் இதுவரை பாராளுமன்றத்தில் அந்தக் கட்சி கால் பதிக்காமலேயே இருந்து வந்தது.

2005-ம் ஆண்டு தே.மு.தி.க.வை தொடங்கிய விஜயகாந்த் அடுத்த ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலிலேயே வெற்றிக் கணக்கை தொடங்கினார். விருத்தாசலம் தொகுதியில் போட்டியிட்டு அந்த தேர்தலில் விஜயகாந்த் வெற்றி பெற்ற நிலையில் தே.மு.தி.க. 8 சதவீத வாக்குகளை பெற்றது.

இதன் பிறகு 2009 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலில் தே.மு.தி.க.வின் வாக்கு சதவீதம் 10 ஆக அதிகரித்தது.

இதனைத் தொடர்ந்து 2011-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்த தே.மு.தி.க. சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி அந்தஸ்தையும் எட்டிப் பிடித்தது.இப்படி தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற தே.மு.தி.க. பாராளுமன்ற தேர்தலில் தொடர்ந்து தோல்வியையே சந்தித்து வந்துள்ளது.

இது போன்ற சூழலில் முதல் முறையாக கட்சி தொடங்கப்பட்டு 20 ஆண்டுகளாகும் நிலையில் தி.மு.க. மூலமாக பாராளுமன்றத்தில் தே.மு.தி.க தடம் பதிக்க உள்ளது.

அ.தி.மு.க. கூட்டணியில் ஏற்கனவே தே.மு.தி.க.வுக்கு மேல்சபை எம்.பி. பதவி தருவதாக உறுதி அளிக்கப்பட்டு அது நிறைவேற்றப்படாததால் அந்தக் கூட்டணியில் இருந்து வெளியேறிய பிரேமலதா சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. வுடன் கைகோர்த்து மேல்சபை எம்.பி. பதவியை பெற்றிருப்பது அந்த கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மத்தியில் மகிழ்ச்சியையும்,உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

முதல்முறையாக டெல்லியில் எங்கள் முரசு கொட்டப்போகிறது என்று அந்த கட்சியின் மூத்த நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். தமிழக சட்டமன்ற தேர்தலில் 2011-ம் ஆண்டுக்கு பிறகு தே.மு.தி.க. தொடர்ந்து தோல்வியையே சந்தித்து வந்துள்ளது.

2016-ம் ஆண்டு நடைபெற்ற மக்கள் நல கூட்டணியில் விஜயகாந்தை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்தியதை மக்கள் ஏற்றுக்கொள்ளாத நிலையில் கடந்தாண்டு அ.தி.மு.க. வுடன் கடைசி நேரத்தில் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால் தே.மு.தி.க., டி.டி.வி. தினகரனுடன் கைகோர்த்தது.

அந்தக் கூட்டணியும் தே.மு.தி.க.வுக்கு கை கொடுக்காத நிலையில் முதல் முறையாக தி.மு.க. வுடன் இணைந்து சட்டமன்றத் தேர்தலை தே.மு.தி.க. சந்திக்க உள்ளது.

# திருப்புவனம் பேரூராட்சி அலுவலகம் புதிய கட்டிடம் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் திறந்து வைத்தார்





**சிவகங்கை, மார்ச் 05:** சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் பொதுநிதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள புதிய பேரூராட்சி அலுவலக கட்டிடத்தினை திறந்து வைத்து, சிறப்பித்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில், தமிழகத்தில் அரசின் அனைத்து துறைகளும் சீரான வளர்ச்சியை பெற்று, சிறப்பாக செயல்பட்டு வருகிறது. பொதுமக்களின் அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டும், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அத்திட்டங்களின் கீழ் பல்வேறு மேம்பாட்டு பணிகளும் தமிழக முழுவதும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆக்கப்பூர்வமாக தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள் வாயிலாக கல்வி, தொழில், வேளாண், வேலைவாய்ப்பு, சட்டம் ஒழுங்கு, தகவல் தொழில்நுட்பம், பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட அனைத்திலும் தமிழகம் சிறந்து விளங்கி, பிற மாநிலங்களுக்கு மட்டுமன்றி இந்திய துணைக்கண்டத்திற்கே முன்மாதிரியாக திகழ்ந்து வருகிறது.

மேலும், மக்களுக்கான திட்டங்களை உரிய முறையில் கொண்டு சேர்க்கும் அரசு துறைகளை சார்ந்த அலுவலகங்கள் பல்வேறு நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைந்திட வேண்டும் என்ற அடிப்படையிலும், சொந்த கட்டிடத்தில் இயங்க வேண்டும் என்ற அடிப்படையிலும், அதற்கென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துறை ரீதியாக நிதி ஒதுக்கீடு செய்தும் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

அந்தவகையில், பேரூராட்சிக்கென ரூபாய் 1.18 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டிடம் கட்டப்பட்டு, இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கென அர்பணிக்கப் பட்டுள்ளது. இக்கட்டிடமானது, சுமார் 4,400 சதுரடி பரப்பளவில், இன்றைய நவீன காலகட்டத்திற்கு ஏற்றவாறு பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக, சிவகங்கை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் புதிய அலுவலக கட்டிடங்கள் அமைப்பதற்கென அடிக்கல் நாட்டும் பணியும், முடிவுற்ற பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கென திறந்து வைக்கும் பணியும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுபோன்று, தமிழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவது மட்டுமன்றி,

பொதுமக்கள் திட்டப்பயன்களை பெறுவதற்கு அரசை நாடி வந்த நிலையில், அதனை மாற்றி மக்களுக்கு பயனுள்ள வகையில், மக்களைத் தேடி அரசு என்ற உன்னத நிலையை ஏற்படுத்திடும் வகையிலும், எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையிலும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் திரு.த.சேங்கைமாறன், மானாமதுரை நகர்மன்றத்தலைவர் சோ.மாரியப்பன் கென்னடி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திருமதி நா.விஜயலெட்சுமி, திருப்புவனம் பேரூராட்சி துணைத்தலைவர் அ.ரகமத்துல்லாகான், உதவி செயற்பொறியாளர் ஜெயகிருஷ்ணன், திருப்புவனம் பேரூராட்சி செயல் அலுவலர் நா.கவிதா மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.






















ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901







## WANTED

Site Supervisor required for construction work in Ambattur



Contact:
8428872887

## WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424













## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588




## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

# கவிதை அரங்கம்!





காற்றலையில்
கலந்து வந்த
உன் குரல்
இதயத்தை
நனைக்க
மனமும் பூத்தது
பூஞ்சோலையாய்

காதல்
கணவா
களைத்திருக்கும்
உன் கண்களுக்கும்
ஓய்வுகொடு

கனவில் சந்திப்போம்

இந்த நொடி
நீளாதா
என்று மனதை
தவிக்கவிடுகிறாய்
சுகமாய்

மலரும்
நினைவுகள்
மனதை தாலாட்ட
உறங்கிப்போனது
விழிகள்

## வாழ்க்கை தத்துவம்...



மனிதன் தான் செய்யும் தவறுகளுக்குச் சிறந்த வக்கீலாகவும், பிறர் செய்த தவறுகளுக்குச் சிறந்த நீதிபதியாகவும் இருக்க விரும்புகிறான்.

அறிவாளிகளுக்கு அறிவு அதிகம், ஆனால் முட்டாள்களுக்கு அனுபவம் அதிகம்.

தலைகுனிந்து என்னைப் பார், தலை நிமிர்ந்து உன்னை நடக்க வைக்கிறேன். - புத்தகம்.

அழும்போது தனிமையில் அழு, சிரிக்கும்போது நண்பர்களோடு சிரி; கூட்டத்தில் அழுதால் நடிப்பு என்பார்கள், தனிமையில் சிரித்தால் பைத்தியம் என்பார்கள்.

நல்லவனாய் இரு. ஆனால் அதை நிருபிக்க முயற்சி செய்யாதே. அதை விட முட்டாள்தனமான விஷயம் எதுவுமில்லை.

வாழ்க்கையில் யாரையும் சார்ந்து வாழ்ந்து விடாதே. உன் நிழல்கூட வெளிச்சம் உள்ளவரை தான் துணைக்கு வரும்.

# "ஹாய் எப்படியிருக்கே?"

ஏற்காடு மலையில் இருந்து இறங்கிய அந்த ஹோண்டா சிட்டி கார் சேலத்தில் அந்த மூவரையும் இறக்கிவிட்டது.

மூவரும் மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த லக்ஸரி இளைஞர்கள். அவர்கள் பேச்சில் விஸ்கியின் உபய குழறல்.

"விக்னேஷ்!... மணி பதினொண்ணுக்கும் மேலாச்சு! நீ போதைல இருக்கே... கொஞ்சம்.. நிதானமாகவே டிரைவ் பண்ணிட்டு போ!" என்றான் ரவி.

"ஓகே... ஓகே...!" என்றபடி வண்டியை "விருட்"டென்று உசுப்பிப் பறந்தான் விக்னேஷ்.

அதேநேரம்,

சென்னையிலிருந்து வந்த அந்தப் பேருந்து, சேலம் பஸ் ஸ்டாண்ட்டில் அவனை இறக்கி விட்டுச் சென்றது.

அவன் தீபக்!..வட இந்திய இளைஞன்.

சேலத்தில் இருக்கும் தன் நீண்ட நாளைய முகநூல் நண்பனுக்கு சர்ப்ரைஸ் கொடுக்க வேண்டி மும்பையிலிருந்து சென்னைக்கு விமானத்தில் வந்து, அங்கிருந்து சேலத்திற்கு பஸ்ஸில் வந்திருந்தான்.

கண்டக்டரிடம் தன் முகநூல் நண்பனின் முகவரியைக் காட்டி விசாரித்துக் கொண்டு, கையில் சூட்கேஸைத் தூக்கிக்கொண்டு, வெறிச்சோடிக் கிடந்த சாலையில் தனியாக நடக்க ஆரம்பித்தான்.

வாயில் ஒரு இந்திப் பாடலை ஹம் செய்தவாறே நடந்தவன், திடீரென்று பின்புறம் கார் சத்தம் கேட்க, அவசரமாகத் திரும்பி, கூசும் ஹெட்லைட் வெளிச்சத்தில் திணறி, சுதாரிக்கும் முன் சாலையோடு சேர்த்து அரைக்கப் பட்டு, கூழாக்கி போனான்.

"க்ரீச்" என்ற ஓசையோடு காரை நிறுத்தி, தள்ளாடியபடியே இறங்கி வந்த விக்னேஷ், தரையோடு தரையாய் கிடந்த அந்த சதைக் கூளத்தை பார்த்து போதையிலும் மிரண்டு, ஓடிப் போய் காரில் ஏறி பிசாசாய்ப் பறந்தான்.

வீட்டை அடைந்தும், மனதிலிருந்து கிலி அகலவில்லை. நைசாக மாடிக்குச் சென்று தன் அறையில் தன் படுக்கையில், "தொப்"பென்று விழுந்தான்.

நடு இரவில் திடுக்கிட்டு விழித்தவன் உறக்கத்தை தொலைத்தான்.

அன்று மட்டுமல்ல, தொடர்ந்து பல இரவுகள் உறக்கம் அவனை நெருங்கவே இல்லை. தினமும் செய்தித் தாளில் அந்த விபத்து குறித்த செய்தியை தேடித் தேடி அலுத்துப் போனவன், "ஏன் அதைப் பற்றி எந்த செய்தியும் வரவில்லை?" குழம்பினான்... தவித்தான்.

நாளடைவில் ஒரு மனநோயாளி போன்ற நிலைக்கு ஆளானான்.

"மனசுக்குள்ளேயே பூட்டி வைத்து மருளுவதை விட நண்பர்களிடம் இதைப்பற்றி டிஸ்கஸ் பண்ணினால் என்ன?" யோசித்தான். அப்போது மூளையில் ஒரு பிளாஷ்.

"அடச்சே!..இந்த குழப்பத்தில் நாலஞ்சு நாள்லயே ஃபேஸ் புக் பக்கமே போகாம இருந்திட்டோமே?... என்னோட அந்தரங்க சுக துக்கங்களை பகிர்ந்து கொள்ள எனக்குன்னு ஒரு முகநூல் நண்பன் இருக்கும்போது நான் எதுக்கு கவலை படணும்?"

வேகமாக சென்று மொபைலை எடுத்து, முகநூல் பக்கத்திற்குச் சென்று, "ஹாய்... எப்படியிருக்கே தீபக்?" டைப் செய்தான். (முற்றும்)

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*பேனை தொடைச்சி பரண்ல இருந்த சாமானை எல்லாம் இறக்கி, ஏத்தி, சுண்ணாம்பு அடிச்சு.. வீட்டைக் கழுவி.. ஒரு வாய் பொங்கல் சாப்பிடுறதுக்கு இந்த வீட்ல என்னவெல்லாம் பண்ண வேண்டியிருக்கு?*



# தினம் ஒரு சமையல்




## சிம்பிள்முட்டைகிரேவி

**தேவையான பொருட்கள்:**

*முட்டை - 2*
*சின்னவெங்காயம் - 10*
*வரமிளகாய் - 2*
*மஞ்சள்பொடி - கால்ஸ்பூன்*
*குழம்புமிளகாய்தூள் - அரைஸ்பூன்*
*தேங்காய் அரைத்தது - கொஞ்சம்*
*உப்பு - தேவைக்கு*
*எண்ணெய் - தேவைக்கு*
*தண்ணீர் - கொஞ்சம்*

**செய்முறை:**



முதலில் தேவையானவற்றை ரெடி பண்ணிக் கொள்ளவும். 2 முட்டையை வேகவைத்து ஆறியதும் கட்பண்ணிவைத்துக்கொள்ளவும்.சின்ன வெங்காயம் கட்பண்ணிக்கொள்ளவும்.

தேங்காய்அரைத்துக்கொள்ளவும். அடுப்பில் ஒரு வாணலியை வைத்து தேவையான எண்ணெய் ஊற்றவும். அதில் கட் பண்ணிய வெங்காயம், கருவேப்பிலை போடவும்.


பின்வர மிளகாய் சேர்க்கவும்.நன்கு வதக்கவும்.பின் மஞ்சள் பொடி சேர்க்கவும்.பின்குழம்பு மிளகாய்தூள் சேர்க்கவும்.பின் கட் பண்ணிய முட்டை, உப்பு சேர்க்கவும்.

அரைத்த தேங்காய் விழுது 2ஸ்பூன், கொஞ்சம் தண்ணீர்சேர்க்கவும்.

தண்ணீர்வற்றி கிரேவி பதம் வந்ததும் கேஸை ஆப் பண்ணிவிடவும்.பாரம்பரிய முட்டைகிரேவி ரெடி.குழம்பு பதம் வேண்டுமானால் கொஞ்சம் தேங்காய்அதிகம்சேர்த்துக்கொள் ளலாம்.ஆனால் கொஞ்சம்விரைவில்சாப்பிட்டுவிட வேண்டும்.

சாதத்தில் பிசைந்து சாப்பிடலாம்.பள்ளிக்கூடம், ஆபீஸ், சுற்றுலாவுக்கு உகந்த கிரேவி.விரைவில்செய்துவிடலாம்.

## மூங்கில் பயன்கள்



மூங்கிலின் ஆரோக்கிய நன்மைகள்

மூங்கிலின் சில ஆரோக்கிய நன்மைகள்:

1. செரிமான ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது

மூங்கில் தளிர்கள் உணவு நார்ச்சத்தால் நிரம்பியுள்ளன, இது குடல் இயக்கங்களை சீராக்க உதவுகிறது மற்றும் மலச்சிக்கலைத் தடுக்கிறது. நார்ச்சத்து ஆரோக்கியமான குடல் நுண்ணுயிரியையும் ஊக்குவிக்கிறது, வீக்கம் மற்றும் செரிமான அசௌகரியத்தைக் குறைக்கிறது.

2. எலும்புகள் மற்றும் மூட்டுகளை பலப்படுத்துகிறது

மூங்கில் சிலிக்காவின் வளமான இயற்கை ஆதாரங்களில் ஒன்றாகும், இது எலும்பு அடர்த்தி மற்றும் மூட்டு ஆரோக்கியத்திற்கு முக்கியமான ஒரு கனிமமாகும். வழக்கமான நுகர்வு ஆஸ்டியோபோரோசிஸைத் தடுக்கவும், இயக்கம் மேம்படுத்தவும் உதவும், குறிப்பாக வயதானவர்களுக்கு.

3. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது

ஆக்ஸிஜனேற்றிகள் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பு பண்புகள் நிறைந்த மூங்கில், நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்த உதவுகிறது. இது தொற்றுகளிலிருந்து பாதுகாக்கும் மற்றும் உடலில் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்கும்.

4. எடை மேலாண்மைக்கு உதவுகிறது

குறைந்த கலோரிகள் மற்றும் அதிக நார்ச்சத்து கொண்ட மூங்கில் தளிர்கள் பசியைக் கட்டுப்படுத்தவும், அதிகமாக சாப்பிடுவதைத் தடுக்கவும் உதவும். அவை எடை இழப்பு உணவுகளில் ஒரு சிறந்த கூடுதலாகும்.

5. ஆரோக்கியமான சருமம் மற்றும் முடியை ஊக்குவிக்கிறது

மூங்கிலில் உள்ள சிலிக்கா கொலாஜன் உற்பத்தியை ஆதரிக்கிறது, சருமத்தை உறுதியாகவும் இளமையாகவும் வைத்திருக்கிறது. இது முடியை வலுப்படுத்துகிறது, உடைவதைக் குறைத்து வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

6. இரத்த அழுத்தம் மற்றும் கொழுப்பை ஒழுங்குபடுத்துகிறது

மூங்கில் பொட்டாசியம் உள்ளது, இது ஆரோக்கியமான இரத்த அழுத்த அளவை பராமரிக்க உதவுகிறது. இதன் நார்ச்சத்து கெட்ட கொழுப்பை (LDL) குறைத்து, இதய நோய் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது.

# நடிகைகளை தவறான ANGLEல் வீடியோ எடுக்கிறார்கள்.. ருக்மிணி வசந்த் கடும் கோபமான பதிவு



ருக்மிணி வசந்த் தற்போது தென்னிந்திய சினிமாவில் முக்கிய நடிகையாக வளர்ந்து வருகிறார். அவருக்கு அதிக அளவில் ரசிகர்களும் கிடைத்து வருகிறார்கள்.

இந்நிலையில் ருக்மிணி வசந்த் கடும் கோபமாக போட்டிருக்கும் ஒரு பதிவு வைரல் ஆகி இருக்கிறது.

நடிகைகள் வெளியில் நிகழ்ச்சிகளுக்கு வரும்போது பலபேர் அவர்களை தவறான ஆங்கிளில் அங்கங்களை ஜூம் செய்து வீடியோ எடுத்து இணையத்தில் வெளியிட்டு வருகிறார்கள்.

அது பற்றி தான் ருக்மிணி வசந்த் காட்டமாக பேசி இருக்கிறார். நாங்கள் கலைக்காக தான் இங்கே இருக்கிறார். இப்படி செய்வது கண்ணியத்தை பாதிக்கும் செயல் என ருக்மிணி கண்டனம் தெரிவித்துள்ளார்.

## சினிமா



ரசிகர்களின் மனம் கவர்ந்த சின்னத்திரை நடிகையாக இருக்கும் கோமதி பிரியா, தற்போது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அழகிய சேலையில் எடுத்துக்கொண்ட போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார்.

இதோ அந்த புகைப்படங்கள்:

# பாலிவுட் நடிகையுடன் இணையும் விஜய் சேதுபதி.. இயக்குநர் இவரா?




அரசன், TRAIN, SLUM DOG: 33, ஜெயிலர் 2 என பல திரைப்படங்களை கைவசம் வைத்துள்ளார் மக்கள் செல்வன் விஜய் சேதுபதி.

இது தவிர இயக்குநர் மணிகண்டன் இயக்கத்தில் காட்டான் என்கிற வெப் தொடரில் நடித்து முடித்துள்ளார். இந்த வெப் தொடரின் டீசர் சமீபத்தில் வெளிவந்து நல்ல வரவேற்பை பெற்ற நிலையில், விரைவில் ஜியோ ஹாட்ஸ்டாரில் வெளிவரவுள்ளது.

இந்த நிலையில், விஜய் சேதுபதியின் அடுத்த திரைப்படம் குறித்து லேட்டஸ்ட் தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இயக்குநர் மகிழ் திருமேனி இயக்கத்தில்தான் விஜய் சேதுபதி அடுத்து நடிக்கவிருக்கிறாராம். விடாமுயற்சி திரைப்படத்தை தொடர்ந்து, மகிழ் திருமேனி இயக்கும் படமாக இது இருக்கும் என கூறப்படுகிறது.

மேலும் இப்படத்தில் பாலிவுட் நடிகை ஷ்ரத்தா கபூர் கதாநாயகியாக நடிக்கவும், சஞ்சய் தத் இப்படத்தில் வில்லனாக நடிக்கவும் அதிக வாய்ப்புகள் உள்ளதாம். விரைவில் இப்படத்திற்கான அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியாகிறதா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# ஜாதகத்திற்கு பூஜை நடைபெறும் கோவில்

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்திற்கு அருகில் உள்ள பெருங்குளத்தில் வழுதீஸ்வரர் கோவில் உள்ளது வளர்பிறை பிரதோஷத்தன்று பள்ளியறை பூஜையில் ஜாதக நகலை வைத்து வழிபட்டால் வேலை திருமணம் குழந்தை பேரு போன்ற வேண்டுதல்கள் நிறைவேறும் இப்பகுதியை ஆட்சி செய்த மன்னர் திருவழுதி பாண்டியன் 12 ஆழ்வார்களில் ஒருவரான நம்மாழ்வாரின் முன்னோர் இவர் என்பார்கள் இவரால் கட்டப்பட்டது இந்த பழுத்தீஸ்வரர் கோவில் அம்பிகையின் பெயர் கோமதி அம்பிகை



அம்பிகை சன்னதியின் அர்த்த மண்டபத்தில் ஒரு மகரிஷியின் சிலை உள்ளது பட்டாபிஷேகத்தின் போது குல குருவிடம் செங்கோல் பெற்று மன்னர்கள் அரசாட்சியை ஏற்பது வழக்கம் அந்த வகையில் மன்னர்களுக்கு செங்கோல் வழங்கிய ஆதீனம் இங்கு உள்ளது கணபதி சண்முகர் தக்ஷிணாமூர்த்தி சப்த கன்னியர்கள் நடராஜர் சண்டிகேஸ்வரர் சன்னதிகள் உள்ளன இங்குள்ள விஷ்ணு துர்க்கையை வழிபட்டால் வெற்றி கிடைக்கும் ஊருக்கு அருகில் பெரியகுளம் இருப்பதால் இதற்கு பெருங்குளம் என பெயர் பெற்றது பெருங்குளம் ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து ஐந்து கிலோ மீட்டர் தூத்துக்குடியில் இருந்து 31 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது .



பெருங்குளம், இன்று ஸ்ரீவைகுண்டத்திற்கு அருகேயுள்ள அழகிய கிராமம், ஆனால் அன்று பாண்டிய நாட்டிலிருந்த பதினாறு நாடுகளில் திருவழுதி வளநாடு என சிறப்புற்றிருந்தது.

இவ்வூரிலுள்ள சிவாலயத்தின் இறைவர் இவ்வூரின் பெயரால் அழைக்கப்படுகிறார், மாறன் சடையன் காலத்திய கல்வெட்டுகளில் "திருவழுதீஸ்வரத்து ஆழ்வார்" என்றும், பின் இராஜராஜன் காலத்தே "திருவழுதீஸ்வரமுடையார்" என்றும், குலசேகர பாண்டியன் காலத்தே "திருவழுதீஸ்வரத்து தேவர் " என்றும் அழைக்கப்படுகிறார் ! எனினும் இன்றும் திருவழுதீஸ்வரமுடையார் என்றே அழைக்கப்படுவது தொன்னிகழ்வு இன்றும் தொடர்வதைக் காணலாம். தனித்தனியே சுவாமி சன்னதியும், அம்பிகை தனி ஆலயத்திலுமாக அமைந்துள்ளது இக்கோவில். சுவாமி சன்னதியின் கருவறை பெரிதாகவும், த்விதள விமானம் என்னும் ஈரடுக்கு விமானமும், கருவறையைச் சுற்றி அந்தராளப் பிரகாரம் என்னும் பாண்டியர் கட்டுமானத்திற்கே உரிய சிறப்பு அமைப்பும் இவ்வாலயத்தில் உள்ளது.

கல்வெட்டு சிறப்பு

இவ்வாலயத்தின் கல்வெட்டுகளில் சடையன்மாறனின் பொ.யு 816ம் ஆண்டு கல்வெட்டு கோவிலின் பழைமையை பறைசாற்றுகிறது . இவ்வாலயத்தின் படியெடுக்கப்பட்ட 33 கல்வெட்டுகளில் 16 கல்வெட்டுகள் விளக்கெற்றுவது குறித்தும், 13 நில தானம் பெறப்பட்டது குறித்தும், ஒரு கல்வெட்டு இவ்வாலயத்திற்கு வரும் பக்தர்களுக்கு உணவளிப்பது குறித்தும், ஒன்று விவசாயி ஒருவர் கொடுத்த இசைக்கருவி குறித்தும், இரண்டாம் இராஜராஜன் காலத்திய ஒரு கல்வெட்டு இவ்வாலயத்தில் சித்திரை மாத சதயத்தில் திருவிழா நடத்த அரங்கன் சந்திரசேகரன் என்பவர் கொடுத்த காசுகள் குறித்துமுள்ளது, சடையன் மாறனின் 24ம் (பொ.யு.829) ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று மிகவும் சிதைந்த நிலையிலுள்ளது

கல்வெட்டுகளின் பட்டியல்

ஆட்சியாளர்களின் வரிசைப்படி

1. சடையன் மாறன் 5
2. மாறன் சடையன் 1
3. சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் 2
4. முதலாம் இராஜராஜன் 4
5. இரண்டாம் இராஜராஜன் 3
6. ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் 1
7. முதலாம் குலோத்துங்கன் 3
8. ஜடாவர்மன் ஸ்ரீவல்லபன் 1
9. ஜடாவர்மன் குலசேகரன் 3
10. சுந்தரபாண்டியன் 4
11. மாறவர்மன் குலசேகரன் 1
12. விக்கிரம பாண்டியன் 1
13. கோநேரின்மை கொண்டான் 2
14. அரசர் பெயர் குறிப்பிடாத இரண்டு கல்வெட்டுகள்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி.

# தினம் ஒரு தலைவர்கள் அஜய் குமார் கோஷ் வரலாறு



அஜய் குமார் கோஷ் 20 பிப்ரவரி 1909 13 ஜனவரி 1962[1]) ஓர் இந்திய விடுதலை இயக்க வீரராவார். இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் முக்கிய தலைவரான இவர் 1954 முதல் 1962 வரை அக்கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தார்.

ஆரம்ப கால வாழ்க்கை

கோஷ், இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள வர்தமான் மாவட்டத்தின் மிகிஜம் என்ற கிராமத்தில் பிறந்தார். இவர் தனது தந்தை மருத்துவர் சசீந்திரநாத் கோஷுடன் கான்பூருக்குச் சென்றார்.

அரசியல் வாழ்க்கை

1926 இல் அலகாபாத் பல்கலைக்கழகத்தில் நுழைவதற்கு முன் கோஷ் பகத்சிங்கையும் பதுகேஷ்வர் தத்தையும் சந்தித்தார். இந்துசுதான் சோசலிசக் குடியரசு அமைப்பின் உறுப்பினராக இருந்தார். 1929 இல் இலாகூர் சதி வழக்கு விசாரணைக்குப் பிறகு இவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால் ஆதாரங்கள் இல்லாததால் விடுவிக்கப்பட்டார். 1931 இல் மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் சீனிவாஸ் சர்தேசாயுடன் தொடர்பு கொண்டார். விடுதலையான பிறகு இந்தியப் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்தார். 1934 இல், இவர் கட்சியின் மத்திய குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டா. மேலும், 1936 இல் அதன் அரசியல் பணியகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1938ஆம் ஆண்டில், கோஷ் கட்சியின் அடையாள பத்திரிக்கையான நேஷனல் பிரண்ட்டின் ஆசிரியர் குழுவில் உறுப்பினரானார். 1951 முதல் 1962 இல் தான் இறக்கும் வரை கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தார். இவர் 1962 ல் இந்திய சீனப் போரின் போது கட்சிக்கு தலைமை தாங்கினார். சீன மக்கள் குடியரசுக்கு பதிலாக இந்தியாவின் நிலைப்பாட்டை ஆதரித்தார். இந்தியப் பொதுவுடைமைக் கட்சியிலிருந்து இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட்) பிளவுபடுவதற்கு முன்பு இவர் மையப் பிரிவின் முக்கிய நபராக இருந்தார்.

# இந்தியாவில் எக்ஸ் தளத்தில் ஆபாச பதிவுகள் மற்றும் வீடியோக்களுக்கு தடை



**புதுடெல்லி, மார்ச் 5:**

சமூக வலைத்தளங்களில் பயனர்கள் அதிகம் பயன்படுத்தும் செயலியாக X தளம் உள்ளது. 'ட்விட்டர்' என்ற பெயரில் செயல்பட்டு வந்த இந்த தளத்தை எலான் மஸ்க் கடந்த 2022 ஆம் ஆண்டு வாங்கினார்.

எலான் மஸ்க் வாங்கிய பிறகு பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன், பல்வேறு புதுப்புது அப்டேட்களும் கொண்டு வரப்பட்டுள்ளன. உலகளவில் 586 மில்லியன் பேரும், இந்தியாவில் மட்டும் சுமார் 30 மில்லியன் பேரும் இந்த தளத்தை பயன்படுத்துகிறார்கள்.

எக்ஸ் தளத்தைப் பொறுத்தவரை ஆபாச வீடியோக்கள் தாராளமாக வலம் வருவதாகவும், அவற்றிற்கு கடிவாளம் போட வேண்டும் என்றும் பயனாளர்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில், பயனர்கள் கோரிக்கையை ஏற்று எக்ஸ் நிறுவனம் அதிரடி முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, எக்ஸ் தளத்தில் ஆபாச பதிவுகள் மற்றும் வீடியோக்களுக்கு தடை விதிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது. இந்த தடை இந்தியாவிற்கு மட்டுமே அமல்படுத்தப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த கட்டுப்பாடு தொடர்பாக பயனாளர்கள் 'க்ரோக்' ஏ.ஐ.யிடம் கேட்டபோது, இனி ஆபாச வீடியோ மற்றும் புகைப்படங்கள் பயனர்களுக்கு காட்டப்படாது என்றும், இந்திய அரசின் விதிகளை பின்பற்றி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறியதாக பலரும் தெரிவித்துள்ளனர்.

# வளைகுடா நாடுகளுக்கு சிறப்பு கட்டுப்பாட்டு அறை எண்களை வெளியிட்ட மத்திய அரசு

**புதுடெல்ல, மார்ச் 5:**

ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து திடீர் போர் தொடுத்து உள்ளன. இருநாட்டு படைகளும் ஈரான் மீது ஏவுகணை, டிரோன் மூலம் தாக்குதல் நடத்தி வருகின்றன. இதில் ஈரானின் உச்சப்பட்ச தலைவர் காமேனி கொல்லப்பட்டார். இதனால் ஈரானும் ஆவேசமாக பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. மேலும் வளைகுடா நாடுகள் மீதும் தாக்குதல் நடத்தி வருகிறது. இதையடுத்து பதற்றம் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளில் வான்பரப்பு மூடப்பட்டது. விமான சேவை ரத்து செய்யப்பட்டதால் ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் மற்றும் சுற்றுலா, கல்வி போன்ற பல்வேறு காரங்களுக்காக அங்கு சென்றவர்கள் திரும்பி வர முடியாமல் தவிக்கின்றனர்.

இந்தநிலையில் ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு குறைந்தளவில் விமான சேவை தொடங்கப்பட்டது. இதற்கிடையே மத்திய கிழக்கு நாடுகளில் பரிதவிக்கும் மக்களை ஏர் இந்தியா விமானம் மூலம் மீட்டு வர மத்திய அரசு நடவடிக்கைமேற்கொண்டுள்ளது. இதனால் அதிகளவில் பயணிகள் இந்தியா திரும்பி வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கு ஆசியா மற்றும் வளைகுடா பிராந்தியத்தின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வெளியுறவு அமைச்சகத்தில் ஒரு சிறப்பு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

# ரூ.5,083 கோடிக்கு ஹெலிகாப்டர்கள், ஏவுகணைகள் கொள்முதல் – பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம்

**புதுடெல்லி, மார்ச் 5:**

இந்தியக் கடலோர காவல்படை மற்றும் கடற்படைக்கு ரூ.5,083 கோடி மதிப்பில் ஹெலிகாப்டர்கள், ஏவுகணைகள் கொள்முதல் செய்ய பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இது குறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இந்தியக் கடலோர காவல்படைக்கு 6 எம்கே-II மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டர்கள் மற்றும் இந்தியக் கடற்படைக்கு தரையிலிருந்து வானில் உள்ள இலக்கை அழிக்கவல்ல ஷெட்டில் ஏவுகணைகள் ஆகியவற்றை ரூ.5,083 கோடி மதிப்பில் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.




டெல்லியில் நடைபெற்ற இந்த ஒப்பந்தம், பாதுகாப்புத் துறை செயலாளர் ராஜேஷ் குமார் சிங் முன்னிலையில் கையெழுத்தானது. இவற்றில் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படும் திட்டத்தின் கீழ், பெங்களூருவில் உள்ள இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்துடன் ரூ.2,901 கோடி மதிப்பில் 6 எம்கே-II மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டர்களை கொள்முதல் செய்ய ஒப்பந்தம் கையெழுத்தானது.

ரஷ்யாவின் ஜெஎஸ்சி ரோசாபோரான் எக்ஸ்போர்ட் நிறுவனத்துடன் ரூ.2,182 கோடி மதிப்பில் ஷெட்டில் ஏவுகணைகளை ஒப்பந்தம் செய்ய கையெழுத்தானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "காமேனி படுகொலையில் மோடி அரசின் மவுனம் நடுநிலையல்ல; பொறுப்பை துறப்பது" – சோனியா காந்தி

**புதுடெல்லி, மார்ச் 5:**

ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில், மத்திய அரசு மவுனம் காப்பது நடுநிலை அல்ல என்று காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார். மேலும், சர்வதேச ஒழுங்கு சீர்குலைந்துள்ள இந்த நிலையில் மவுனம் என்பது பொறுப்பைத் துறப்பதற்குச் சமம் என்று விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக ஆங்கில நாளிதழ் ஒன்றில் அவரது கட்டுரை வெளியாகியுள்ளது. அதில் சோனியா காந்தி, "பிப். 28-ம் தேதி அமெரிக்காவும் - இஸ்ரேலும் இணைந்து நடத்திய தாக்குதல்களில் ஈரான் உச்சத் தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டதை மார்ச் 1 அன்று ஈரான் உறுதிப்படுத்தியது. அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து வந்த நிலையில், அதற்கு நடுவில் பதவியில் இருக்கும் ஒரு நாட்டின் தலைவரை கொல்வது சர்வதேச உறவுகளில் தீவிர சிக்கலை ஏற்படுத்தும்.

அதிர்ச்சிகரமான இந்த விவகாரத்தில் இந்தியா காக்கும் மவுனம் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அந்த படுகொலையையும் ஈரானின் இறையாண்மை மீறலையும் இந்திய அரசு கண்டிக்காமல் தவிர்த்துள்ளது. அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தொடங்கிவைத்த தாக்குதல்களைப் பற்றி குறிப்பிடாமல், ஈரான் மேற்கொண்ட பதிலடி தாக்குதலை மட்டுமே பிரதமர் நரேந்திர மோடி கண்டித்துள்ளார். அதோடு, இந்த விவகாரம் "ஆழ்ந்த கவலையை" ஏற்படுத்துவதாகவும், "பேச்சுவார்த்தை மற்றும் தூதரக ரீதியில் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்" என்றும் பொதுவான கருத்துகளை மட்டுமே பிரதமர் மோடி வெளியிட்டார்.

ஒரு வெளிநாட்டு தலைவர் கொல்லப்பட்டது குறித்து, இறையாண்மை அடிப்படையிலும், சர்வதேச சட்டத்தின் அடிப்படையிலும் இந்தியா தனது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தி இருக்க வேண்டும். ஆனால், அப்படி ஒரு தெளிவான நிலைப்பாடு இந்திய அரசிடம் இருந்து வெளிப்படவில்லை. இது நமது வெளிநாட்டுக் கொள்கையின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்குகிறது.


இந்தச் சூழலில் மவுனம் நடுநிலையல்ல. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா, கொள்கை அளவிலான எதிர்ப்பை வெளிப்படுத்தாவிட்டால், சர்வதேச நெறிமுறைகள் சீரழிவதை அது எளிதாக்கும். சர்வதேச ஒழுங்கு சீர்குலைந்துள்ள இந்த நிலையில், மவுனம் என்பது பொறுப்பைத் துறப்பதாகும். இந்தியா தனது நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும்.

கொலை நடந்ததற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு பிரதமர் நரேந்திர மோடி, இஸ்ரேலுக்குப் பயணம் மேற்கொண்டு, அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசுக்கு முழு ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார்.

புவி அரசியலைத் தாண்டி இந்தச் சம்பவத்தின் தாக்கங்கள் உலகம் முழுவதும் பரவி வருகின்றன. இந்தியாவின் நிலைப்பாடு இந்த துயரத்திற்கு மறைமுக ஒப்புதலாகத் தோன்றுகிறது. ஈரான் மீதான குண்டுவீச்சுகளையும் திட்டமிட்ட படுகொலைகளையும் காங்கிரஸ் கட்சி கண்டித்துள்ளது என்றார்.

# ஈரான் மோதல்; இந்தியாவின் கச்சா எண்ணெய் கையிருப்பு எத்தனை நாட்களுக்கு வரும்? வெளியான தகவல்

**புதுடெல்லி, மார்ச் 5:**




இந்தியாவிடம் தற்போது 25 நாட்களுக்கான கச்சா எண்ணெய் மற்றும் 25 நாட்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் கையிருப்பு உள்ளது. இதனால் மொத்தம் 8 வாரங்களுக்கு தேவையான கச்சா மற்றும் பெட்ரோலிய பொருட்களின் இருப்பு நம்மிடம் உள்ளது.

இதனால், கச்சா எண்ணெய், சமையல் கியாஸ் மற்றும் இயற்கை எரிவாயு ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கான வேறு வழிகளை ஆராய்ந்து வருகிறோம் என அரசு கூறியுள்ளது.

மேற்காசிய நாடுகளிடம் இருந்து பெரிய அளவில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்ய கூடிய நாடாக இந்தியா உள்ளது.

இந்த சூழலில், மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கைஎரிவாயுதுறைக்கான மந்திரி ஹர்தீப் சிங் பூரி இன்று, கச்சா எண்ணெய், சமையல் கியாஸ் மற்றும் பிற பெட்ரோலிய பொருட்கள் ஆகியவற்றை விநியோகம் செய்வதற்கு எவ்வளவு கையிருப்பு உள்ளது? என்பது பற்றி அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளுடன் அவர் மறுஆய்வு மேற்கொண்டார்.

இதன்பின்பு பெட்ரோலிய அமைச்சகம் வெளியிட்ட செய்தியில், எதிர்வரும் சூழலை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். கையிருப்பை உறுதிசெய்யும் வகையில் தேவையான அனைத்துநடவடிக்கைகளும் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# ஈரான் உச்ச தலைவர் கமேனி படுகொலையை ஆதரிக்கிறாரா மோடி? ராகுல் கேள்வி

**புதுடெல்லி, மார்ச் 5:**

அமெரிக்கா- இஸ்ரேல் கூட்டாக இணைந்து ஈரான் மீதான அரதிரடித் தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் கமேனி படுகொலையை பிரதமர் மோடி ஆதரிக்கிறாரா? என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

ஈரான் மீதான ஒருதலைபட்ச தாக்குதல்களும், மத்திய கிழக்கு நாடுகள் மீதான ஈரானின் தாக்குதல்களும் கண்டிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

அமெரிக்கா - இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி படுகொலை செய்யப்பட்டதையடுத்து அவரின் கருத்துகள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பாக ராகுல் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

உலகில் இந்தியாவின் அந்தஸ்தை மௌனம் குறைக்கிறது என்பதை பிரதமர் மோடி புரிந்துகொள்ள வேண்டும்.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே அதிகரித்து வரும் விரோதங்கள் பலவீனமான பிராந்தியத்தைப் பரந்த மோதலுக்குத் தள்ளுவதாக அவர் கூறினார்.

கிட்டத்தட்ட ஒரு கோடி இந்தியர்கள் உள்பட கோடிக்கணக்கான மக்கள் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்கின்றனர்.

பாதுகாப்பு கவலைகள் உண்மையானவை என்றாலும், இறையாண்மையை மீறும் தாக்குதல்கள் நெருக்கடியை



மேலும் மோசமாக்கும்.

ஈரான் மீதான ஒருதலைபட்ச தாக்குதல்களும், மற்ற மத்திய கிழக்கு நாடுகள் மீதான ஈரானின் தாக்குதல்களும் கண்டிக்கப்பட வேண்டும்.

வன்முறையைத் தீர்க்க பேச்சுவார்த்தை மற்றும் கட்டுப்பாடும் மட்டுமே அமைதிக்கான ஒரே வழியாகும். இந்தியா தார்மீக ரீதியாகத் தெளிவாக இருக்க வேண்டும்.

சர்வதேச சட்டம் மற்றும் மனித உயிர்களைப் பாதுகாப்பதில் வெளிப்படையாகப் பேச நமக்குத் தைரியம் இருக்க வேண்டும்.

நமது வெளியுறவுக் கொள்கை இறையாண்மை மற்றும் சர்ச்சைகளை அமைதியான முறையில் தீர்ப்பதில் வேரூன்றியுள்ளது. அது நிலையானதாக இருக்க வேண்டும்.

இந்த வன்முறையை தீர்க்க பிரதமர் மோடி பேச வேண்டியது அவசியம். மௌனம் காப்பது ஏன்? உலக ஒழுங்கை வரையறுக்க நாட்டின் தலைவரைப் படுகொலை செய்வதை அவர் ஆதரிக்கிறாரா? இவ்வாறு ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

# அரசு மருத்துவமனை பிணவறையில் இருந்து சடலத்தின் உடல் பாகங்களை கவ்விச் சென்ற நாய்; அதிர்ச்சி சம்பவம்

**ஐதராபாத், மார்ச் 5:**

தெலுங்கானா மாநிலம் மஹாபூப்நகர் மாவட்டம் ஜட்சர்லா நகரில் அரசு மருத்துவமனை உள்ளது. இதனிடையே, குளத்தில் மூழ்கி உயிரிழந்த நபரின் சடலம் மருத்துவமனையில் உள்ள பிணவறையில் வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மருத்துவமனையின் பிணவறைக்குள் இன்று நுழைந்த நாய் அங்கிருந்த சடலத்தின் உடல்பாகங்களை கடித்து



குதறியது. பின்னர், சடலத்தின் உடல்பாகங்களை கவ்விக்கொண்டு பிணவறையில் இருந்து வெளியே ஓடியுள்ளது.

பிணவறையில் இருந்து உடல்பாகங்களை கவ்விக்கொண்டு மருத்துவமனை வளாகத்தில் நாய் ஓடியதை சிலர் வீடியோவாக எடுத்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளனர்

இந்த வீடியோ வைரலான நிலையில் இதுகுறித்து விசாரணை நடத்திய மாநில சுகாதாரத்துறை, மருத்துவமனையில் அலட்சியமாக செயல்பட்ட 4 ஊழியர்களை சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டுள்ளது.

# கேரளா:யானைகளை பாதுகாக்கும் அதிநவீன ட்ரோனை அறிமுகம் செய்து வைத்தார் துணை ஜனாதிபதி

**திருவனந்தபுரம், மார்ச் 5:**

துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் 2 நாட்கள் பயணமாக கேரளாவிற்கு வருகை தந்துள்ளார். இந்தநிலையில், வனப்பகுதியில் மனித தொடர்பு இல்லாமல் சுற்றி திரியும் காட்டுயானைகளை கண்காணிக்கவும் யானைகளுக்கு இடையே நடக்கும் மோதலை கண்டறியும் வகையில் வடிவமைக்கப்பட்ட அதிநவீன ட்ரோனை துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் அறிமுகம் செய்து வைத்தார். இந்த விழாவில் கேரள ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் மற்றும் மத்திய பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மற்றும் சுற்றுலாத் துறை இணை மந்திரி சுரேஷ் கோபி ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த ட்ரோன் யானைகளை அமைதிப்படுத்தி மிக துல்லியமாக காட்டிற்குள் பாதுக்காப்பாக விரட்டும் வேலையை செய்ய உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வன ஊழியர்களுக்கு காட்டுப்பகுதியில் ஏற்படும் ஆபத்தை உணர்த்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் யானைகள் எதிர்கொள்ளும் துன்பங்கள் மற்றும் யானைகளுக்குள் நடக்கும் மோதல்களையும் கண்காணித்து அதற்குரிய தீர்வுகாண இந்தட்ரோன் உதவும். சுமார் பத்துவருடங்களுக்கு முன்பே, கருடா ஏரோஸ்பேஸ் (GARUDA AEROSPACE) நிறுவனம் தமிழ்நாடு வனத்துறையினருக்காக முதல் ட்ரோனை உருவாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

கடந்த காலங்களில், கருடா ஏரோஸ்பேஸ் நிறுவனம் இயற்கைக்கான உலகளாவிய நிதியம் (WWF) உள்ளிட்ட முன்னணி பாதுகாப்பு அமைப்புகளுக்கும், இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு வனத்துறைகளுக்கும் அதிகமான ட்ரோன்களை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாநிலங்களவை எம்.பி. ஆகிறார்; நிதின் நபின்

**புதுடெல்லி, மார்ச் 5:**

பாஜக தேசிய தலைவர் நிதின் நபின், ராஜ்ய சபா எம்.பி.யாக தேர்வு செய்யப்பட இருக்கிறார்.

நாடாளுமன்ற ராஜ்ய சபா காலி பதவிகளுக்கான தேர்தல் நடைபெற உள்ள நிலையில், பாஜக வேட்பாளர் பட்டியல் வெளியாகியுள்ளது. அதில், பீகாரில் இருந்து பாஜக தேசிய தலைவர் நிதின் நபினும், சிவேஷ் குமாரும் போட்டியிட இருக்கின்றனர். அசாமில் இருந்து திராஷ் கவ்வாலா, ஜோகன் மோகன் ஆகியோரும், சத்தீஷ்கரில் இருந்து லட்சுமி வர்மாவும், அரியானாவில் இருந்து சஞ்சய் பாட்டியாவும், ஒடிசாவில் இருந்து மன்மோகன் சமல், சுஜித் குமார் ஆகியோரும், மேற்கு வங்காளத்தில் இருந்து ராகுல் சின்காவும் போட்டியிடுகின்றனர்.

# மாநிலங்களுக்கு உரிய அதிகாரம் வேண்டும்! மு.க.ஸ்டாலின் முயற்சிக்கு சித்தராமையா முழு ஆதரவு

**புதுடெல்லி, மார்ச் 5:**

மத்தியமாநில உறவுகள் குறித்த தேசிய அளவிலான உரையாடலை மீண்டும் தொடங்க வேண்டும் என்ற தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் முயற்சிக்கு கர்நாடகாவின் முழு ஆதரவைத் தெரிவித்து அவருக்கு கர்நாடக முதல்-மந்திரி சித்தராமையா எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

கூட்டாட்சி என்பது வெறும் அரசியல் கோரிக்கை அல்ல - அது நமது அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பாகும். பல ஆண்டுகளாக, நிதி மற்றும் சட்ட விவகாரங்களில் அதிகாரம் மத்திய அரசிடம் குவிக்கப்படுவது, நமது அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் வகுத்த சமநிலையைச் சீர்குலைத்துள்ளது.

மாநிலங்களுக்குத் தரப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்ற, அவற்றுக்கு உரிய அதிகாரமும், நிதி சுதந்திரமும் இருக்க வேண்டும். இந்தியாவின் வலிமையே அதன் கூட்டுறவு கூட்டாட்சி, அரசியலமைப்பு மீதான நம்பிக்கை மற்றும் பன்முகத்தன்மையை மதிப்பதில் தான் உள்ளது.

அனைத்துமாநிலங்களும் ஒன்றிணைந்துவிவாதிக்கவும், கூட்டாட்சி தத்துவத்தில் சமநிலையை மீட்டெடுக்கவும் 'மாநிலங்களுக்கு இடையேயான கவுன்சில்' (INTER-STATE COUNCIL) போன்ற ஒரு வலுவான தளத்தை மத்திய அரசு அமைத்துத் தர வேண்டும் என்று வலியுறுத்துவேன். இந்தியாவின் ஜனநாயக மற்றும் கூட்டாட்சி கட்டமைப்பை வலுப்படுத்தும் முயற்சிகளில் ஆக்கபூர்வமாகப் பங்களிக்க கர்நாடகா தயாராக உள்ளது.

இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

# மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் 16 நூல்கள்: துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட்டார்

**புதுடெல்லி, மார்ச் 5:**

மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் வெளியீட்டுப் பிரிவால் பதிக்கப்பட்ட புகழ்பெற்ற தமிழ் அறிஞர்கள், பாரம்பரியம், கட்டிடக்கலை, இலக்கியம், கலாச்சாரம் மற்றும் நாகரிக சிந்தனைகள் குறித்த 16 புத்தகங்களை துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்னான் டெல்லி துணை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிட்டார்.

வடக்கிலிருந்து தென்னிந்தியா வரையிலான ஆன்மிக ஒற்றுமையைக் குறிக்கும் புனித மையமான ராமேசுவரம், ராமானுஜரின் வாழ்க்கை மற்றும் தத்துவம், வரலாற்று சிறப்புமிக்க நடுக்கல் பாரம்பரியம், அரிக்கமேட்டின் பண்டைய வர்த்தக மையம், நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களின் பக்தி இலக்கியம், இயற்கை விவசாய மரபுகள், பண்டைய தமிழ் இசைக் கருவிகள், தமிழ்நாட்டின் நாட்டுப்புற தெய்வங்கள் வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பங்கள், மீனாட்சி அம்மன் கோவில் மற்றும் பிரகதீஸ்வரர் கோவிலின் கட்டிடிக்கலை அற்புதங்கள் உள்ளிட்ட பல்வேறு கருப்பொருட்களை இந்த வெளியீடுகள் உள்ளடக்கியுள்ளன.

மணிமேகலை மற்றும் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பற்றிய படைப்புகளும் இதில் அடங்கியுள்ளன. இந்த நிகழ்ச்சியில் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், இணை அமைச்சர் எல்.முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




## போலி ஆவணங்கள் மூலம் இந்திய பாஸ்போர்ட்: விமானத்தில் இலங்கைக்கு தப்ப முயன்ற பெண் கைது

**சென்னை, மார்ச்.05:** இலங்கை செல்லும் விமானத்தில் பயணிக்க சென்னை விமான நிலையத்துக்கு வந்த பெண் ஒருவர் மீது போலீஸாருக்கு சந்தேகம் எழுந்தது. அவரை சென்னை மத்திய குற்றப்பிரிவில் உள்ள போலி பாஸ்போர்ட் புலனாய்வுப் பிரிவு போலீஸார் விசாரித்தனர்.

அப்போது, அந்த பெண்ணின் பெயர் பேபி லோனா (48). இலங்கை நாட்டுக் குடியுரிமை பெற்றவர். இந்தியரான முஸ்தாக்அகமது என்பவரை திருமணம் செய்து கொண்டுள்ளார்.

2015-ம் ஆண்டு இலங்கையிலிருந்து விமானம் மூலம் இந்தியா வந்து அகதியாக தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூரில் வாடகை வீட்டில் கணவருடன் வசித்து வந்துள்ளார்.

பின்னர் அவர் இலங்கை பிரஜை என்பதை மறைத்து ஆதார் கார்டு, பான் கார்டு மற்றும் வாக்காளர் அடையாள அட்டையைப் பெற்றுள்ளார். அதை அடிப்படையாக வைத்து, இந்தியர் என இந்திய பாஸ்போர்ட் பெற்று தற்போது இலங்கைக்கு தப்ப முயன்றது தெரியவந்தது.

அவரை சென்னை பன்னாட்டு விமான நிலைய வெளிநாட்டவர் பதிவு மண்டல அலுவலர் பிடித்து போலீஸாரிடம் ஒப்படைத்துள்ளார். இதையடுத்து பேபி லோனாவை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## சென்னையிலிருந்து டெல்லி சென்ற விமானத்தில் பணிப் பெண்ணிடம் பாலியல் அத்துமீறல்: திமுக கவுன்சிலர் நண்பருடன் கைது



**சென்னை, மார்ச்.05:** திருவள்ளூர் நகராட்சியின் 6-வது வார்டு திமுக கவுன்சிலராக இருப்பவர் பிரபாகரன். இவரது நண்பர் தியாகு, திருவள்ளூர் மேற்கு மாவட்ட அதிமுக பிரமுகராக உள்ளார்.

இருவரும் கடந்த மாதம் 25-ம் தேதி, சென்னையிலிருந்து டெல்லிக்கு விமானத்தில் சென்றுள்ளனர். பயணத்தின்போது இருவரும் மதுபோதையில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

அப்போது விமானத்தில் பணியில் இருந்த 25 வயதுடைய பணிப்பெண்ணின் ஊர் பெயரை கேட்டு தொடர்ந்து கேலி செய்ததாகக் கூறப்படுகிறது. ஒரு கட்டத்தில் எல்லை மீறி அந்த பெண்ணைத் தொட்டு பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாகவும் தெரிகிறது.

அந்த பெண், விமானம் டெல்லி சென்றடைந்ததும் தனது உயர் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். அவர்கள் சென்னை மீனம்பாக்கம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

இதையடுத்து, பிரபாகரன் மற்றும் தியாகுவிடம் போலீஸார் விசாரித்தனர். மேலும், அடுத்தகட்ட விசாரணைக்கு நேரில் ஆஜராக வேண்டும் என அறிவுறுத்தி உள்ளனர்.

ஆனால், இருவரும் ஆஜராகவில்லை. அதைத்தொடர்ந்து, அவர்கள் மீது பாலியல் துன்புறுத்தல் மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர்.

இதற்கிடையே, நேற்று முன்தினம் மாலை பிரபாகரனும், தியாகுவும் டெல்லியிலிருந்து விமானம் மூலம் சென்னை திரும்பியுள்ளனர். இதை அறிந்த போலீஸார், விமான நிலையம் சென்று இருவரையும் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

## விழுப்புரத்தில் வியாபாரியிடம் பட்டப்பகலில் துணிகரம்: கத்தி முனையில் 4 கிலோ தங்கம் கொள்ளை

**விழுப்புரம், மார்ச்.05:** *விழுப்புரத்தில் பட்டப்பகலில் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் நகை வியாபாரியை வழிமறித்து கத்திமுனையில் சுமார் 4 கிலோ நகையை கொள்ளையடித்து சென்றவர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.*

விழுப்புரம், விராட்டிக்குப்பம் பாதை ஜனகராஜ் கார்டன் பகுதியைச் சேர்ந்தவர் ராஜமாணிக்கம் (43). தங்க நகை பட்டறை நடத்தி வருகிறார். இவர் சென்னை சவுகார்பேட்டையில் தங்கக் கட்டிகளை வாங்கி வந்து, ஆபரண நகைகளாக தயாரித்து கொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட தோடு, ஜிமிக்கி, சங்கிலி, வளையல் உள்ளிட்ட ஆபரண நகைகளுடன், சென்னைக்கு செல்வதற்காக விழுப்புரம் ரயில் நிலையம் நோக்கி, தனது இருசக்கர வாகனத்தில் நேற்று காலை புறப்பட்டுச் சென்றார். அவருடன், அவரது உதவியாளர் முரளி என்பவரும் வந்துள்ளார்.

பெருமாள் கோயில் தெருவில் கோட்டை விநாயகர் கோயில் அருகே வந்தபோது, 2 இருசக்கர வாகனத்தில் முகமூடி அணிந்து வந்த 5 பேர் ராஜமாணிக்கத்தை வழிமறித்து கத்தியைக் காட்டி மிரட்டியுள்ளனர். பின்னர் அவரிடம் இருந்த நகைப் பையை வலுக்கட்டாயமாகப் பறித்துள்ளனர். அப்போது அவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

வழிப்பறி செய்யும்போது மக்களிடம் கொள்ளையர்கள் சிக்கினால் அவர்களை பாதுகாக்க, கூடுதலாக 2 பைக்குகளில் ஆயுதங்களுடன் 4 பேர் வந்துள்ளதாகத் தெரிகிறது. கொள்ளைச் சம்பவத்தை அறிந்த விழுப்புரம் எஸ்பி சாய் பிரனீத் மற்றும் போலீஸார் விரைந்து வந்து விசாரணை நடத்தினர்.

கண்காணிப்பு கேமராக்களும் ஆய்வு செய்யப்பட்டன. சுமார் 4 கிலோ நகை கொள்ளையடிக்கப்பட்டதாக விசாரணையில் தெரியவந்தது. இதன் மதிப்பு ரூ.6 கோடியாகும். இதற்கிடையில் கொள்ளை சம்பவத்தின்போது துப்பாக்கி பயன்படுத்தப்பட்டதாக வெளியான தகவலை போலீஸார் மறுத்துள்ளனர்.

கொள்ளையர்களை பிடிக்க அண்டை மாவட்ட போலீஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகை வியாபாரி ராஜமாணிக்கம், அவருடன் பணியாற்றும் தொழிலாளர்களிடமும் போலீஸார் தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விழுப்புரம் நகர போலீஸார் வழக்கு பதிந்து 5 தனிப்படை அமைத்துள்ளனர். இந்த நகை கொள்ளை விவகாரத்தை வருமான வரித் துறை மற்றும் அமலாக்கத் துறை விசாரணைக்கு உட்படுத்தினால் முழு விவரம் தெரியவரும் என நகை

## பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை சுற்றி கட்டுமானத்துக்கு தடை: பசுமை தீர்ப்பாய உத்தரவை எதிர்த்து வழக்கு

**சென்னை, மார்ச்.05:** *பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை சுற்றி ஒரு கிமீ சுற்றளவுக்கு எந்த கட்டுமானங்களுக்கும் ஒப்புதல் வழங்கக்கூடாது என்ற பசுமை தீர்ப்பாய உத்தரவை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், இதுதொடர்பாக தமிழக அரசு பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*



பள்ளிக்கரணை சதுப்பு நிலம் தொடர்பாக தாமாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரணை மேற்கொண்ட தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயம், சதுப்பு நிலத்தை சுற்றி ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்கு எந்தவொரு கட்டுமானங்களுக்கும் ஒப்புதல் வழங்கக்கூடாது என தமிழக அரசுக்கு கடந்த ஆண்டு செப்டம்பரில் உத்தரவிட்டிருந்தது.

அந்த உத்தரவுப்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (சிஎம்டிஏ), பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதிகளைச் சுற்றி சுமார் ஒரு கிமீ சுற்றளவுக்கு எந்த கட்டுமானங்களுக்கும் அனுமதி வழங்க முடியாது என மறுப்பு தெரிவித்து கடந்த அக்டோபரில் உத்தரவிட்டது.

இந்த உத்தரவால் பள்ளிக்கரணையை சுற்றியுள்ள பகுதிகளில் அடுக்குமாடி கட்டுமானப்பணிகள் முழுமையாக ஸ்தம்பித்துள்ளதாகக் கூறி ரியல் எஸ்டேட் நிறுவனங்களின் கூட்டமைப்பான கிரெடாய் சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

அதில், எவ்வித அறிவியல்பூர்வமான ஆய்வும் மேற்கொள்ளாமல் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை சுற்றி ஒரு கிமீ சுற்றளவுக்கு எந்தவொரு கட்டுமானங்களும் கட்டக்கூடாது என தேசிய பசுமை தீர்ப்பாயம் பிறப்பித்துள்ள உத்தரவு சட்டவிரோதமானது என்பதால் அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என கோரியிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இதுதொடர்பாக தமிழக அரசு மற்றும் சிஎம்டிஏ, மாநகராட்சி உள்ளிட்டோர் மூன்று வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்துள்ளனர்.

பள்ளிக்கரணையில் உள்ள ராம்சார் சதுப்பு நிலங்களை ஒட்டிய பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகளையோ, வணிக வளாகங்களையோ கட்டக்கூடாது என ஏற்கெனவே உயர் நீதிமன்றம் தடை விதித்திருந்த நிலையில் பள்ளிக்கரணையில் சதுப்பு நிலத்தை ஒட்டிய பகுதிகளில் பன்னடுக்கு அடுக்குமாடி குடியிருப்பு வளாகம் கட்ட தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சிஎம்டிஏ அனுமதி அளித்துள்ளதாக சர்ச்சை எழுந்தது.

அதுதொடர்பாகவும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கில், சிஎம்டிஏ தரப்பில், சதுப்பு நிலத்தில் அந்த குடியிருப்புகளை கட்ட அனுமதியளிக்கவில்லை என்றும், சதுப்பு நிலத்துக்கு வெளியே உள்ள தனியார் பட்டா நிலத்தில் தான் அந்த கட்டிடம் கட்ட சிஎம்டிஏ சார்பில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அரசு தரப்பில் விளக்கமளிக்கப்பட்டது.

அதையடுத்து உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு, பள்ளிக்கரணை சதுப்பு நிலம் தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருவதால், இந்த பிரச்சினை தொடர்பாக உச்ச நீதிமன்றத்தை நாட உத்தரவிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னையில் தனியார் நிறுவனத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை மயிலாப்பூர் லஸ் பகுதியில் உள்ள தனியார் ஹெல்த் கேர் நிறுவனத்திற்கு தொலைபேசி மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

சற்று நேரத்தில் குண்டு வெடிக்கும் என நேற்றிரவு தொலைபேசியில் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து காவல்துறையில் புகார் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து, தனியார் நிறுவனத்தில் காவல்துறையினர் இரவு முழுவதும் நடத்திய சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் புரளி என தெரியவந்துள்ளது.

## கழிவுநீர் தொட்டிக்குள் விழுந்த கோவில் காளை: 6 மணி நேர போராட்டத்திற்கு பின் மீட்பு

**போச்சம்பள்ளி, மார்ச்.05:** கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த பாளேத்தோட்டம் கிராமத்தில், குமார் என்பவர் புதிதாக வீடு கட்டி வருகிறார். இதற்காக அவரது வீட்டின் அருகே ஆழமான கழிவுநீர் தொட்டி ஒன்று தோண்டப்பட்டிருந்தது. நேற்று இரவு அந்த வழியாக வந்த இரண்டு கோவில் காளைகள் திடீரென ஒன்றை ஒன்று முட்டிக்கொண்டு ஆக்ரோஷமாக சண்டையிட்டன.




இந்த மோதலின் போது, எதிர்பாராத விதமாக ஒரு கோவில் காளை நிலைதடுமாறி அருகிலிருந்த கழிவுநீர் தொட்டிக்குள் விழுந்தது. காளையின் அலறல் சத்தம் கேட்டு ஓடிவந்த அக்கம் பக்கத்தினர், உடனடியாக போச்சம்பள்ளி தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

நிலைய அலுவலர் சக்திவேல் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து மீட்புப் பணியில் இறங்கினர். காளை கடும் ஆக்ரோஷத்துடன் இருந்ததால், அதனை நெருங்குவதில் வீரர்களுக்கு சிக்கல் ஏற்பட்டது. உடனடியாக ஜேசிபி (JCB) இயந்திரம் வரவழைக்கப்பட்டு, மிகுந்த எச்சரிக்கையுடன் மீட்புப் பணி தொடர்ந்தது.

சுமார் 6 மணி நேர நீண்ட போராட்டத்திற்குப் பிறகு, கோவில் காளை எவ்வித காயமுமின்றி உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டது. காளையை பத்திரமாக மீட்ட தீயணைப்பு வீரர்களுக்கு கிராம மக்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தனர். இச்சம்பவம் அப்பகுதியில் சிறிது நேரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## குன்னூர் அருகே 18-வது முறையாக அங்கன்வாடியை சூறையாடிய கரடி

**குன்னூர், மார்ச்.05:** *நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சி உட்பட்ட காந்திபுரம் பகுதியில் 500-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளது. இந்தப் பகுதிக்கு நாள்தோறும் அவ்வப்போது கரடி காட்டெருமை உள்ளிட்ட வனவிலங்குகள் நடமாடி வருவதால் இப்பகுதி மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர்.*



மேலும் இங்குள்ள அங்கன்வாடியை 18-வது முறையாக கரடி உடைத்து உள்ளே சென்று அங்குள்ள பொருட்களை நேற்று சூறையாடியது. இதனால் மாணவ மாணவிகளும் செய்வதறியாமல் திகைத்துப் போய் உள்ளனர்.

பருப்பு எண்ணெய் மற்றும் அரிசி உள்ளிட்ட பொருட்களை தூக்கி வீசி அங்கும், இங்கும் கொட்டி சென்றுள்ளது. இது குறித்து தகவல் அறிந்தவுடன் குன்னூர் வனத்துறையினர் விரைந்து சென்று சம்பந்தப்பட்ட பகுதியை ஆய்வு மேற்கொண்ட பின்னர் கரடியின் நடமாட்டம் குறித்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## கொடைக்கானலுக்கு சுற்றுலா வந்துள்ள இஸ்ரேல் நாட்டு பயணிகளுக்கு 24 மணிநேர போலீஸ் பாதுகாப்பு

**பழநி, மார்ச்.05:** *கொடைக்கானலில் இஸ்ரேல் நாட்டு சுற்றுலா பயணிகள் தங்கியிருக்கும் வட்டக்கானல் பகுதியில் துப்பாக்கி ஏந்திய போலீஸார், நக்சல் தடுப்புப் பிரிவு படையினர் 24 மணி நேரமும் தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.*

கொடைக்கானலில் டிசம்பர் முதல் மார்ச் வரை இஸ்ரேல் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வந்து வட்டக்கானல் பகுதியில் தங்குவர். இங்கு வரும் இஸ்ரேலியர்கள் மொத்தமாகக் கூடி சிறப்பு வழிபாட்டில் ஈடுபடுவது வழக்கம். அதன்படி, தற்போது வட்டக்கானல் பகுதியில் 50-க்கும் மேற்பட்ட இஸ்ரேல் சுற்றுலாப் பயணிகள் வந்து தங்கியுள்ளனர்.

தற்போது ஈரான்-இஸ்ரேல் போர் பதற்றம் காரணமாக, வட்டக்கானல் பகுதியில் தங்கியுள்ள இஸ்ரேல் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், கொடைக்கானல் போலீஸார் மற்றும் நக்சல் தடுப்பு பிரிவு படையினர் துப்பாக்கியுடன் 24 மணி நேர பாதுகாப்பு மற்றும் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் சோதனைச் சாவடி பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வாகனங்கள் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன. நிலைமை சீராகும் வரை இந்தப் பாதுகாப்புப் பணி தொடரும் என போலீஸார் தெரிவித்தனர்.

## சுய உதவிக் குழுவினரின் பொருட்கள் கண்காட்சி: அண்ணா பல்கலை.யில் 3 நாட்கள் நடைபெறுகிறது



**சென்னை, மார்ச்.05:** *சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் பெண் தொழில் முனைவோர் தயாரித்துள்ள பொருட்களின் கண்காட்சி மற்றும் விற்பனை அண்ணா பல்கலைக்கழகத்தில் இன்று (புதன்கிழமை) தொடங்கி 3 நாட்கள் நடைபெறுகிறது.*

அண்ணா பல்கலைகழக மகளிர் மேம்பாட்டு மையம், சர்வதேச பெண்கள் தினத்தை கொண்டாடும் வகையில் பெண் தொழில்முனைவோர் தயாரித்துள்ள பொருட்களின் கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்வை பல் கலைக் கழக வளாகத்தில் இன்று முதல் 3 நாட்களுக்கு நடத்த உள்ளது.

பல் கலைக்கழகத்தின் கிண்டி பொறியியல் கல்லூரி வளாகத்தில் ஐகியூஏசி கட்டிடத்தின் முன்புறம் உள்ள சாலையிலும், விவேகானந்தா கலையரங்கத்தை ஒட்டியுள்ள சாலையிலும் இந்த கண்காட்சி மற்றும் விற்பனை நடைபெறும்.

இதில் பெண் தொழில் முனைவோர் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழுவினரின் தயாரிப்புகள் பல்வேறு அரங்குகளில் காட்சிப்படுத்தப்படும்.

இந்த கண்காட்சி, விற்பனை நிகழ்ச்சியை அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) வி.குமரேசன், பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர் பேராசிரியர் பி.டி.என். ஸ்ரீதர் ஆகியோர் இன்று காலை 9.30 மணிக்கு தொடங்கி வைக்கின்றனர். இந்த கண்காட்சி வருகிற 6-ம் தேதி வரை தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

## பிப்ரவரியில் கூடுதல் நேரம் பணியாற்றுவதால் முழு ஊதியம் வழங்குக: கவுரவ விரிவுரையாளர்கள் வேண்டுகோள்



**சென்னை, மார்ச்.05:** *போராட்ட நாட்களை பணி நாட்களாக ஈடு செய்ய பிப்.26 முதல் தினமும் கூடுதலாக 2 முதல் 3 மணி நேரம் வரை பணியாற்றுவதால் பிப்ரவரி மாதத்துக்கு முழு ஊதியம் வழங்க வேண்டும் என்று முதல்வருக்கு கவுரவ விரிவுரையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.*

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு கலைக் கல்லூரி யுஜிசி தகுதி பெற்ற கவுரவ விரிவுரையாளர்கள் சங்கத்தின் மாநில தலைவர் ஜி. சிவகுமார் நேற்று வெளியிட்ட அறிக்கை:

சம வேலைக்கு சம ஊதியம், மாதம் ரூ.57,700 வீதம் 12 மாத கால ஊதியம், பெண் கவுரவ விரிவுரையாளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு கல்லூரி கவுரவ விரிவுரையாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் வகுப்புகளை புறக்கணித்து கடந்த பிப்.9 முதல் கல்லூரி அளவிலும் அதைத்தொடர்ந்து சென்னையில் உள்ள கல்லூரி கல்வி ஆணையர் அலுவலகத்தில் தொடர் காத்திருப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

தொடர்ந்து 17 நாட்கள் போராட்டம் நடந்தது. அப்போது, 12 மாத ஊதியம் வழங்கப்படும் என அமைச்சர் வாக்குறுதி அளித்ததால் தற்காலிகமாக போராட்டத்தை கைவிட்டு பிப்.26 முதல் பணிக்குத் திரும்பினர். தொடர் போராட்டத்தின் விளைவாக கவுரவ விரிவுரையாளர்களுக்கு ரூ.5 ஆயிரம் ஊதிய உயர்வு வழங்க முதல்வர் உத்தரவிட்டு அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டது.

மிகக் குறைந்த ஊதியத்தில் பணியாற்றும் நிலையில் போராட்டக் காலத்துக்கான ஊதியம் 17 நாட்களுக்கு ரூ.15,179 பிடித்தம் செய்யப்பட்டால் கவுரவ விரிவுரையாளர்கள் மிகுந்த பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்படுவர்.

எனவே, போராட்ட நாட்களை ஈடு செய்யும் பொருட்டு பிப்.26 முதல் கூடுதலாக 2 முதல் 3 மணி நேரம் வரை பணியாற்றி வருவதால் பிப்ரவரி மாதத்துக்கான முழு ஊதியம் ரூ.25 ஆயிரம் வழங்க ஆணையிடுமாறு தமிழக முதல்வருக்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# குருவாயூர்- எழும்பூர் எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையில் மாற்றம்- தெற்கு ரெயில்வே அறிவிப்பு




**சென்னை, மார்ச்.05:** தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

மதுரை கோட்டத்தில் நடைபெறும் மறுசீரமைப்பு பணி காரணமாக குருவாயூர்- சென்னை எழும்பூர் எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

குருவாயூரில் இருந்து இன்று (புதன்கிழமை) முதல் 5,6,7,8, 11,12,13,14,15,18,19,20,21,22,25,26,27,28,29 தேதிகளில் இரவு 11.15 மணிக்கு புறப்பட்டு எழும்பூர் வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்.161289) விருதுநகர், மானாமதுரை, காரைக்குடி, திருச்சி ஆகிய மாற்றுப்பாதை வழியாக இயக்கப்படும்.

மதுரை, சோழவந்தான், கொடைக்கானல் சாலை, திண்டுக்கல், மணப்பாறை ரெயில் நிலையங்கள் செல்லாது.அருப்புக்கோட்டை, சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய கூடுதல் நிறுத்தங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# காகங்கள் தொடர்ந்து இறப்பு: மக்களுக்கு சுகாதாரத் துறை அறிவுறுத்தல்

**சென்னை, மார்ச்.05:** காகங்கள் இறப்பது தொடர்ந்து வருவதால் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று தமிழக பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது.

சென்னை அடையாறு பகுதியில் கடந்த ஜன.5-ம் தேதி காகங்கள் அடுத்தடுத்து உயிரிழந்தன. இறந்த காகங்களின் மாதிரிகளை ஆய்வு செய்த, மத்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம்,பறவை காய்ச்சலால் காகங்கள் இறந்ததை உறுதி செய்தது. அதைத்தொடர்ந்து, தடுப்பு நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட்டது.

இந்நிலையில், திருவள்ளூர், திருவண்ணாமலை, கடலூர் உள்ளிட்ட 14 மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி மாநிலத்திலும் காகங்கள் தொடர்ந்து உயிரிழந்து வருகின்றன. இதுதொடர்பாக தமிழக பொது சுகாதாரத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "தமிழகத்தில் 14 மாவட்டங்களில் பறவை காய்ச்சலால் காகங்கள் உயிரிழந்தாலும், மற்ற பறவைகளுக்கோ, மனிதர்களுக்கோ பாதிப்பு கண்டறியப் படவில்லை.

காகங்கள் உயிரிழப்பது தொடர்ந்து வருவதால், பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். உயிரிழக்கும் பறவைகளை வெறும் கையால் தொட்டு அப்புறப்படுத்தக் கூடாது. காய்ச்சல் இருந்தால், உடனடியாக மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெற வேண்டும்" என்று தெரிவித்தனர்.



சார்ங்கபாணி ஸ்வாமிக்கும் ஆதிகும்பேஸ்வரருக்கும் மாசி மகத்தன்று எதிர்சேவை வைபவம் நடைபெறுவது வருடத்தில் ஒருநாள் மட்டுமே... கும்பகோணம்..

# மாணவிக்கு பாலியல் தொந்தரவு- பள்ளி தலைமை ஆசிரியர் கைது


**தேன்கனிக்கோட்டை, மார்ச்.05:** தேனி மாவட்டம் உத்தமபாளையம் அடுத்த ஆனைமலையான்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் சுதாகரன் (வயது 51). கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அன்னை நகரில் தங்கியிருந்து அஞ்செட்டி தாலுகாவில் உள்ள உரிகம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக வேலை செய்து வருகிறார். இவர் 10 வயதுடைய 5-ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாக தெரிகிறது. இதுகுறித்து மாணவி தனது பெற்றோரிடம் கூறினார்.

இது தொடர்பாக மாணவியின் தாய் குழந்தைகள் அவசர கால உதவி எண்ணிற்கும், தேன்கனிக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்திலும் புகார் செய்துள்ளார்.

இதையடுத்து தேன்கனிக்கோட்டை அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து தலைமையாசிரியர் சுதாகரனை கைது செய்தனர். இவர் மீது ஏற்கனவே பல்வேறு புகார்கள் வந்ததால் கடந்த டிசம்பர் மாதம் தான் இந்த பள்ளிக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முட்டைகள் தேக்கத்தால் 12 நாட்களில் 110 காசுகள் சரிவு

**நாமக்கல், மார்ச்.05:** நாமக்கல் மண்டலத்தில் 1000-க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ள இங்கு தினசரி 7 கோடிக்கும்மேல் முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இவை தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும், அரசின் சத்துணவு திட்டத்திற்கும், வெளிமாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும் சுமார் 80 லட்சம் முட்டைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இதற்கான விலையை தினசரி தேசிய முட்டை ஒருங்கிணைப்புகுழு நிர்ணயம் செய்கிறது.



கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 16-ந்தேதி கோழிப்பண்ணை வரலாற்றில் முதல்முறையாக முட்டை கொள்முதல் விலை 600 காசுகளை தொட்டது. தொடர்ந்து அதிகரித்து வந்தமுட்டை கொள்முதல் விலை 640 காசுகள் என்கிற புதிய உச்சத்தை தொட்டது. பின்னர் படிப்படியாக முட்டை விலை குறைய தொடங்கியது. கடந்த 12 நாட்களுக்கு முன்பு 540 காசுகளாக இருந்த முட்டை விலை படிப்படியாக குறைந்து நேற்று முன்தினம் 460 காசுகளாக குறைந்தது.

நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் அதன் விலையை அதிரடியாக 30 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 430 காசுகளாக குறைந்து உள்ளது. இதனால் கடந்த 12 நாட்களில் மட்டும் முட்டை விலை 110 காசுகள் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே கோடை காலம் மற்றும் ரம்ஜான் பண்டிகை தொடங்கி உள்ள நிலையில் முட்டையின் நுகர்வு குறைந்துள்ள நிலையில் அமெரிக்கா- ஈரான் போரால் அரபு நாடுகளுக்கு தினசரி 80 லட்சம் அளவிலான முட்டை ஏற்றுமதியும் தற்போது முற்றிலும் முடங்கி உள்ளது. இதனால் முட்டை விலை வேகமாக குறைந்து வருவதால் பண்ணையாளர்கள் கவலை அடைந்து உள்ளனர்.

இது குறித்து தேசிய முட்டை ஒருங்கிணைப்புகுழுவின் நாமக்கல் மண்டல நிர்வாகிகள் கூறியதாவது:-

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் ரம்ஜான் நோன்பு, கிறிஸ்தவர்களின் தவக்காலம் போன்ற காரணங்களால் முட்டை நுகர்வு சரியும். அதன்படி தற்போது 20 சதவீதம் வரை பொதுமக்கள் இடையே முட்டை நுகர்வு சரிந்து உள்ளது. அதனால் விற்பனையை அதிகரிக்க கொள்முதல் விலை குறைக்கப்பட்டு உள்ளது.

இதேபோல் நாமக்கல் மண்டலத்தில் இருந்து தினசரி துபாய், கத்தார், ஓமன் போன்ற வளைகுடா நாடுகள் உள்பட பல்வேறு நாடுகளுக்கு சுமார் 80 லட்சம் முட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. தற்போது அமெரிக்கா- ஈரான் இடையே நடைபெற்று வரும் போர் காரணமாக கடந்த 3 நாட்களாக முட்டை ஏற்றுமதி நிறுத்தப்பட்டு உள்ளது. இதனால் கடந்த 3 நாட்களில் மட்டும் வெளிநாடுகளுக்கு செல்லும் சுமார் 2 கோடியே 40 லட்சம் முட்டைகள் ஏற்றுமதி அடியோடு நிறுத்தப்பட்டு உள்ளது.

இது தவிர ரம்ஜான் பண்டிகை மற்றும் கோடை காலம் தொடங்கி உள்ளதால் ஏற்றுமதி சரிந்துள்ளதால் 15 கோடிக்கும் அதிகமான முட்டைகள் தேக்கம் அடைந்துள்ளது.

இதனால் முட்டைகளை குளிர்பதன கிடங்குகளில் சேமித்து வைக்கும் பணியில் பண்ணையாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்றனர்.

# ராணிப்பேட்டையில் தோல் கழிவுநீர் குழாயில் விஷவாயு தாக்கி 4 பேர் மயக்கம்

**ராணிப்பேட்டை, மார்ச்.05:** ராணிப்பேட்டை அடுத்த வி.சி.மோட்டூரில் தோல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது.



இந்த சுத்திகரிப்பு நிலையத்தில் ராணிப்பேட்டை நகரம் மற்றும் சுற்றியுள்ள தோல் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றி அனுப்பபடும் கழிவுநீர் பல்வேறு நிலைகளில் சுத்திகரிக்கப்பட்டு வருகிறது.

சுத்திகரிப்பு நிலையத்திற்கு தொழிற்சாலைகளிலிருந்து கழிவுநீர் வரும் குழாயில் சுத்திகரிப்பு நிலையம் சார்பில் அவ்வப்போது அடைப்பு சரி செய்வது உள்பட பராமரிப்பு பணிகள் நடைபெறுவது வழக்கம்.

இந்த நிலையில் இன்று காலை வி.சி.மோட்டூர் தனியார் கியாஸ் ஏஜென்சி எதிரில், சுத்திகரிப்பு நிலையத்திற்கு தோல் தொழிற்சாலைகளில் இருந்து கழிவு நீர் வரும் பெரிய அளவிலான குழாயில் அடைப்பு ஏற்பட்டது. அதனை சரி செய்ய அதன் மேல் புறத்தை திறந்து அதில் 4 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது விஷவாயு தாக்கி கத்தியவாடி கிராமத்தை சேர்ந்த ஏழுமலை(54) என்பவர் மயங்கி விழுந்தார். இதை பார்த்த ஆற்காட்டை சேர்ந்த சாந்தகுமார் (31), மேல்விஷாரத்தை சேர்ந்த இப்திகார் உல்கக் (31), பூண்டிகிரமத்தைசேர்ந்த ரமேஷ்(46) ஆகியோர் ஏழுமலையை மீட்க முயன்றனர். அவர்களும் மூச்சு திணறி மயக்கம் ஏற்பட்டு மயங்கினர்.

இதை பார்த்த சுத்திகரிப்பு பணிக்கு உதவியாக வந்திருந்த பெண்கள் ராணிப்பேட்டை தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர். தீயணைப்பு படையினர் விரைந்து வந்து குழாய்க்குள் மயங்கிய நிலையில் இருந்த 4 பேரை உடனடியாக மீட்டனர்.

மீட்கப்பட்டவர்கள் உடனடியாக சிகிச்சைக்காக வாலாஜா அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் ஏழுமலை மேல் சிகிச்சைக்காக பூட்டுத்தாக்கில் உள்ள சி.எம்.சி. மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். மற்ற 3 பேருக்கும் வாலாஜா அரசு மருத்துவமனையில் தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர்களை மேல் சிகிச்சைக்காக வேலூர் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்தனர்.

இது தொடர்பாக ராணிப்பேட்டை, வாலாஜா போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் ராணிப்பேட்டையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# செஞ்சி அருகே விவசாய கிணற்றில் கார் பாய்ந்து வழக்கறிஞர் உட்பட 4 பேர் உயிரிழப்பு

**விழுப்புரம், மார்ச்.05:** சென்னையை அடுத்த கெருகம்பாக்கம், குன்றத்தூர் மெயின் ரோட்டைச் சேர்ந்தவர் சேகர் மகன் வினோத்(38), சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர். இவரது நண்பர்கள் சென்னை மவுலிவாக்கத்தைச் சேர்ந்த குமார் மகன் சேகர்(27), கெருகம்பாக்கம் அம்பேத்கர் தெருவைச் சேர்ந்த மணி மகன் ராஜா(45), கோலப்பாக்கம் காந்தி தெருவைச் சேர்ந்தவர் ஆதிகேசவன் மகன் ஜெயமுருகன்(42). இவர்கள் நான்குபேரும், சென்னையில் இருந்து திருவண்ணாமலைக்கு காரில் நேற்று (மார்ச் 2) இரவு சென்றனர்.

பவுர்ணமி கிரிவலம் சென்றுவிட்டு, இன்று (மார்ச் 3) காலை வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். காரை ராஜா என்பவர் ஓட்டி இருக்கிறார். திண்டிவனம் - திருவண்ணாமலை தேசிய நெடுஞ்சாலையில், விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த சத்தியமங்கலம் அருகே ஆலம்பூண்டி என்ற இடத்தில் வந்தபோது, கட்டுப்பாட்டை இழந்து, தாறுமாறாக கார் ஓடி இருக்கிறது.

அப்போது தடுப்பு கட்டைகள் மீது மோதி, சாலையோரத்தில் இருந்த ராமச்சந்திரன் என்பவருக்கு சொந்தமான 50 அடி ஆழ விவசாய கிணற்றில் கார் பாய்ந்தது. இக்கிணற்றில் சுமார் 40 அடிக்கு தண்ணீர் இருந்தது. இதனால் கிணற்றில் கார் மூழ்கியது. இது குறித்து அப்பகுதி மக்கள் அளித்த தகவலின் பேரில் சத்தியமங்கலம் போலீஸார் மற்றும் செஞ்சி தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். மேலும் பொக்லைன் இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டு, கிணற்றில் மூழ்கிய காரில், கயிற்றை கட்டி மீட்கும் பணி தொடங்கியது.


சுமார் இரண்டரை மணி நேரம் போராட்டத்துக்கு பிறகு, கார் மீட்கப்பட்டது. அப்போது காரிலேயே உயிரிழந்த நிலையில் வினோத், சேகர், ராஜா ஆகியோர் உடல்களும் இருந்தது. மேலும் கிணற்றில் மூழ்கிய ஜெயமுருகன் உடலும், தீயணைப்புத் துறையினர் தேடுதலுக்கு பிறகு கிடைத்தன.

இதையடுத்து நான்கு பேரின் உடல்களும் பிரேத பரிசோதனைக்காக முண்டியம்பாக்கத்தில் உள்ள விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. சத்தியமங்கலம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மீட்பு பணியை வேடிக்கை பார்க்க மக்கள் கூடியதால், திருவண்ணாமலை - திண்டிவனம் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.




# தேனியில் ஓபிஎஸ் ஆதரவாளர்கள் கூண்டோடு அதிமுகவில் ஐக்கியம்

**சென்னை, மார்ச்.05:** முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தின் சொந்த மாவட்டமான தேனியில் அவரது ஆதரவாளர்கள் ஒட்டுமொத்தமாக அதிமுகவில் இணைந்தனர்.



முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கடந்த வாரம் சென்னையில் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து திமுகவில் இணைந்தார். காலம் முழுவதும் எம்ஜிஆர், ஜெயலலிதா யாரை எதிர்த்து அரசியல் செய்தார்களோ அந்த கட்சியில் அவர் இணைந்ததற்கு ஓபிஎஸ் ஆதரவாளர்கள் பலரும் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து தேனி மாவட்டத்தில் ஓபிஎஸ் ஆதரவாளர்கள் பலரும் கடந்த ஒரு வாரமாக படிப்படியாக அதிமுகவில் இணைந்து வருகின்றனர்.

இதன் ஒருபகுதியாக க.மயிலை ஒன்றிய ஓபிஎஸ் ஆதரவாளர்கள் அதிமுகவில் இணையும் நிகழ்வு கடமலைக்குண்டுவில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு அதிமுக தேனி கிழக்கு மாவட்டச் செயலாளர் முருக்கோடை ராமர் தலைமை வகிக்க, தெற்கு ஒன்றியச் செயலாளர் எஸ்எம்.ராமர் முன்னிலை வகித்தார்.

இதில் க.மயிலை தெற்கு ஒன்றியத்தில் உள்ள 18 கிளைச் செயலாளர்களும் ஓபிஎஸ் அணியில் இருந்து ஒட்டுமொத்தமாக விலகி அதிமுகவில் இணைந்தனர். குமணன்தொழு, வனத்தாய்புரம், மண்ணூத்து, சென்றாயபுரம், தேவேந்திரபுரம், கோம்பைத்தொழு, முத்துலாபுரம், வலம்புரி உள்ளிட்ட 18 கிராமங்களைச் சேர்ந்த கிளைச் செயலாளர்கள் விலகியதால் இப்பகுதியில் ஓபிஎஸ் கூடாரம் முற்றிலும் காலியாகி உள்ளது.

# "இன்னும் 3 நாட்களில் கூட்டணி உறுதியாகும்" - இழுக்கும் ராமதாஸ்

**சென்னை, மார்ச்.05:** யாருடன் கூட்டணி என்பது இன்னும் மூன்று நாளில் முடிவாகும் என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார்.



"நமதுஇலக்கை அடைவதற்கான வாகனம் வந்துவிட்டது" என்று கடந்த வாரம் சொன்ன ராமதாஸ், இன்னும் கூட்டணியை முடிவு செய்ய முடியாத குழப்பான நிலையில் இருக்கிறார். இதனால் அவரது விசுவாசிகள் நம்பிக்கை இழந்து வருகின்றனர்.

இந்த நிலையில், அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக நிர்வாகிகள் கருத்துக் கேட்புக் கூட்டத்தை நேற்றும் தைலாபுரத்தில் நடத்தினார் ராமதாஸ். கடந்த ஒரு வாரத்தில் ராமதாஸ் நடத்திய 2-வது கருத்துக் கேட்புக் கூட்டம் இது. இந்தக் கூட்டத்தில் பாமக கவுரவத் தலைவர் ஜி.கே. மணி, செயல் தலைவர் ஸ்ரீகாந்தி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ராமதாஸ், "பாமக, இப்போது முக்கியமான கால கட்டத்தில் இருக்கிறது. நாங்கள் இன்னும் கூட்டணி பற்றி முடிவு செய்யவில்லை; விரைவில் முடிவு செய்வோம். கூட்டணியைப் பற்றி முடிவு செய்யாததால் கூட்டணி தொடர்பான கேள்விகளுக்கு என்னிடம் பதில் இல்லை" என்றார்.

"நமக்கான வாகனம் வந்துவிட்டது என்று சொன்னீர்களே... அந்த வாகனத்தில் எதாவது மாற்றம் இருக்கிறதா..?" செய்தியாளர்கள் கேட்டதற்கு, "மாற்றங்கள் வருவது இயற்கை. ஒரு முடிவு எடுத்து விட்டால் உறுதியாக இருப்போம். அடுத்த 3 நாட்களில் தமிழக அரசியலில் பரபரப்பு இருக்கும். இன்னும் 3 நாட்களில் கூட்டணி உறுதி செய்யப்படும்" என்றார். "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்று சொல்லி வந்த ராமதாஸ், மாசியிலாவது மகிழ்ச்சியான முடிவை அறிவிப்பாரா என்று பார்க்கலாம்.

# காங்கிரஸ் – திமுக உடன்பாடு: கார்த்தி சிதம்பரம் நம்பிக்கை

**சென்னை, மார்ச்.05:** காங்கிரஸ் -இடையே தொகுதி உடன்பாடு ஏற்படும் என காங்கிரஸ் எம்.பி. கார்த்தி சிதம்பரம் தெரிவித்தார். தஞ்சாவூரில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழகத்தில் மிகப் பெரிய கட்சியான அதிமுகவுக்கு அதிகளவில் உறுப்பினர்கள் உள்ளனர்.



ஆனால், அக்கட்சியின் செயல்பாடு முன்பிருந்ததுபோல தற்போது இல்லை. அக்கட்சியில் எந்த முடிவையும் எடுக்க முடியாமல் உள்ளனர். கட்சி பஞ்சாயத்துக்குகூட பாஜகவை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தவெக தலைவர் விஜய் நடத்தும் கட்சி இன்னும் அரசியல் கட்சியாக மாறவில்லை. அது தற்போதும் ரசிகர் மன்றமாக தான் உள்ளது. விஜய்க்கென்று ஒரு ரசிகர் கூட்டம் உள்ளது. அது ஆதரவு கூட்டமாக மாறலாம். ஆனால். அந்தக் கூட்டம் வாக்கு வங்கியாக மாறலாம். அந்த வாக்குகள் சீட்டாக மாறுமா என்பது கேள்விக்குறிதான்.

காங்கிரஸ்- திமுக கூட்டணி தொடர வேண்டும் என்ற எண்ணத்துடன் 2 கட்சிகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.காங்கிரஸ் அதிகாரப்பூர்வமான பேச்சுவார்த்தையை திமுகவுடன்தான் நடத்துகிறது. இதில் உடன்பாடு ஏற்படும். இவ்வாறு அவர் கூறினார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM